JL
V2;194;19 (3/M) M;N39
N44
69412

புதுக்கோட்டை ஸமஸ்தான

# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1944-ம் ௵ நவம்பர் ௴ 4௳ [ந. 222

தேசீய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

யுத்தத்துக்குப்பின் உலக சீர்திருத்தம்.
—23-ம் பக்கம் பார்க்க.

## கடல் மூலமாக வந்த படைகள் வால்சேரனில் இறங்கிவிட்டன.

பிரஸங்கம் CCXXII.

## ஜெர்மனியின் உள்நாட்டு நிலைமை.

### ஹிம்லரின் அடக்குமுறை.

(கிரிஸ்டாபர்—பக்ளி டெயிலி டெலிகிராப்).

ஜெர்மனியில் திரைக்குள் என்ன நடைபெறுகிறது. ஹிம்லர் உள்நாட்டில் கொடுங்கோன்மையை ஏற்பாடு செய்து வருகிறான். நாஸி ஆக்ஷிக்கு விசுவாசத்தைக் காட்ட வேண்டும். அல்லது எதிர் காலத்தில் ஜனங்களுக்கு லாபம் கிடைக்கும் என்ற நல்லெண்ணங்களை வளர்ச்சி செய்வதற்காக இது கையாளப்படவில்லை. ஜனங்களிடம் அதிக பீதிதான் உண்டாக்கப்படவேண்டுமாம். புதிய ஆயுதங்களை உற்பத்தி செய்வதில் ஜெர்மன் விஞ்ஞான சாஸ்திரிகள் அதிக கவனம் செலுத்தி வருகிறார்கள். மற்ற நடவடிக்கைகளைப் பொருத்து ஜெர்மனியையும், அதன் நிர்வாகிகளையும் இருட்டு மூடிவிட்டது.

ஹிட்லரையும், ஹிட்லராதிக்கத்தையும் கபடமாக எதிர்த்துப்போராடும் முறைகள் இப்பொழுது பலப்பட்டுவிட்டனவென்பதுதான் மிகவும் திருப்திகரமான தகவல். இந்த எதிர்ப்பு இயக்கத்தின் விவரங்களைப்பற்றி இப்பொழுது ஒன்றும் சொல்லுவதற்கில்லை, அவைகள் நிலைத்திருப்பது மட்டும் உண்மை. அவைகளைப்பற்றி அநேக தகவல்களை நாம் கூடிய சீக்கிரத்தில் கேள்விப்படுவோம் அவைகளில் முக்கியமான படைக்கு டெல்வீஸ் கொள்ளைக்காரர்கள் என்று பெயர் வழங்கும். இது வாலிபர்களின் முயற்சி ஆனதால் இது வருங்காலத்திற்கு முக்கியத்துவமுள்ளது. இந்தக் கோஷ்டி ஹிட்லர் யுவர்கள் கோஷ்டிக்குள்ளேயேதோன்றி அந்த கோஷ்டியை அழிக்க முற்பட்டிருக்கிறது.

அதன் கொள்கைகள் சாதாரணமானவை. ஹிட்லரைத் தொலைத்துவிடவேண்டும். ஏனென்றால் போரை நீடித்து நடத்துவதன் மூலம் ஹிட்லர் ஜெர்மனியின் க்ஷேமத்திற்குக் குந்தகம் விளைவித்து வருகிறான். இந்த இயக்கத்தாரிடம் பொருளும், ஆயுதங்களுமிருக்கின்றன. அது ரைன்லாந்தில் அதிக பலம் பொருந்தியிருக்கிறது. மற்ற இடங்களிலும் சில பகுதிகளிருக்கின்றன. அவர்கள் ஹிட்லரையும் ஜெர்மனியின் க்ஷேமத்தையும் வேறுபடுத்தி விட்டார்கள். 1920-ம் வருஷத்திற்குப்பின் ஜனித்தனவர்களுள் ஸ்வதந்திர வாழ்க்கையில் இது சிறந்த நடவடிக்கையென்று கருதுகிறார்கள். இந்தக் கிளர்ச்சிகள் மட்டும் நாஸி தத்துவத்தை ஒழித்துவிட முடியாது. வெடிகுண்டு, பீரங்கிகுண்டு வீச்சுக்கு அவைகள் முற்போக்கான நடவடிக்கைகள் என்றுதான் சொல்லவேண்டும். பொதுஜன மத்தியில் இவ்விதமான எதிர்ப்பு கோஷ்டிகள் காணப்பட்டபோதிலும் ஜெர்மன் கைதிகள் சொல்லுவதிலிருந்து சேனையில் ஒருவித மனக்கசப்பும் ஏற்படவில்லையென்று தோன்றுகிறது. மூன்றில் இரண்டு பேர்கள் கைதிகளாக இருக்கப்பிரியப்படுகிறார்கள்.

ஆகிலும் யுவர்கள் யந்திர பீரங்கியுடனும், கைத்துப்பாக்கிகளுடனும் ஊக்கமாகப் போர் புரிவார்கள். அதேவிதமாக ஆக்ஷேபனையன்னியில் திறமையுடனும், அவர்கள் சரணடைவார்கள். இவ்வளவு சாதுவான ஜனங்களை எவ்விதம் நடத்துவது. எனினும் அவர்கள் மிகவும் துர்பலமான ஜெர்மனியை விட்டு வெளியேறுகிறார்கள். மேற்குப் போர்முனையில் மட்டும் இந்த வேனிர்காலத்தில் ஜெர்மனிக்கு 10 லக்ஷம் பேர்கள் நஷ்டமாகின. 6 லக்ஷம் கைது செய்யப்பட்டார்கள். 4 மிலியன் கொல்லப்பட்டார்கள் அல்லது நிரந்தரமாக முடமாக்கப் பட்டிருக்கிறார்கள். சக்தியை இழந்த ஜெர்மனிதான் பாக்கியிருக்கிறது. அது இன்னும் மூடபக்தியுடன் வெற்றிகிடைக்குமென்று நம்பியிருக்கிறது. இதற்கு யாதொரு நியாயமும் கிடையாது. இதேவிதமாகத்தான் கண்மூடித்தனமாக அது புதிய ஆயுதங்களையும் நம்பியிருக்கிறது. இந்த ஆயுதங்களினால் வெற்றிகிடைக்குமென்று ஜெர்மனி சொல்லுவதை எல்லோரும் பள்ளிப்பிள்ளைகளைப்போல் பாடம் படிக்கிறார்கள்.

சமீபவாரங்களில் போர் முனையிலுள்ள ஆபீஸர்கள் அடிக்கடி நழுவிச் செல்லுவதைக் கண்டு ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் கவலைகொண்டிருக்கிறார்கள். கட்டாய ராணுவ சேவையிலிருந்து தப்பி ஓடும் பொதுஜன ஊழியரைத்தாக்கி விடலாம். ஆகிலும் படையை விட்டு ஓடும் ஆபீஸரை ஹிம்லர்கூடப் பிடித்துவிட முடியாது. ஆகையால் போர் முனையில் தப்பி ஓடி விட்டவர்களின் குடும்பங்களைப்பொருத்து பதில் நடவடிக்கை ஆரம்பிக்கப்படுமென்று ஒரு எச்சரிக்கைப் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. சேனையிலிருந்து நழுவிச் செல்லுகிறவர்களைத் தடுக்க இன்னும் கடுமையான முறைகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. ராணுவ விசுவாசப் பிரமாணத்தைத் தவிர ராஜவிசுவாசப் பிரமாணம் செய்ய வேண்டுமென்பது நமக்கு விசித்திரமாகத்தோன்றுகிறது. ஜெர்மானியர்களுக்கு அவ்விதம் தோன்றவில்லை. ஜெர்மனியின் தற்காப்புக்காக தேசத்தின் உற்சாகத்தைக் கிளப்பி விடுவதற்கு ஹிம்லரின் கொடுமை போதுமானதாக இருக்கும்.

---

## வார யுத்தச் செய்திகள்.

### (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 24—10—44 (செவ்வாய்க்கிழமை). | மேற்கு ஹாலந்தில் பீல்ட் மார்ஷல் மாண்ட் காமரி முன்னேறித் தாக்க ஆரம்பித்துவிட்டார். |
| 25—10—44 (புதன்கிழமை). | செம்படை நார்வேயின் விடுதலைக்கு முற்பட்டுவிட்டது. நார்வேயிலுள்ள கிர்கெனிஸ் துறைமுகம் பிடிபட்டது. |
| 26—10—44 (வியாழக்கிழமை). | பிரிடிஷ் படைகள் ஹாலந்திலுள்ள வாட் என்னும் ரஸ்தா நிலையத்தைப் பிடித்துவிட்டன. பெருவாரியான நஷ்டத்துக்குப்பின் கடற் போரிலிருந்து ஜப்பானிய கடற்படை பின்வாங்கிவிட்டது. எதிரியின் 58 யுத்தக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன, அல்லது பழுதாக்கப்பட்டன. நேசதேசப் படைகள் கிரீஸில் லாரிஸாவைப் பிடித்தன. |

## (A)—முக்கியமான சம்பவங்கள்—தொடர்ச்சி.

| | |
|---|---|
| 27—10—44 (வெள்ளிக்கிழமை). | பிரிடிஷ் படைகள் ஹாலந்திலுள்ள ஷெர்டெக்னன் பாஷையும், டில்பர்க்கையும் பிடித்தன. |
| | அமெரிக்கப்படைகள் பிலிப்பைன்ஸிலுள்ள சாமாரை விடுவித்தன. |
| | செம்படை செகோஸ்லவேகியாவில் உஷோரோட்டைப் பிடித்தது. |
| 28—10—44 (சனிக்கிழமை). | பல்கேரியா நேசதேசத்தாருடன் யுத்த நிறுத்த உடன்படிக்கையில் கையெழுத்து செய்தது. |
| | யூகோஸ்லாவியா தேசாபிமானப் படைகள் யூகோஸ்லாவியாவில் டால்மேஷியா கடற்கரையிலுள்ள ஸ்பிளிட் துறைமுகத்தை விடுவித்தன. |
| 29—10—44 (ஞாயிற்றுக்கிழமை). | ருஷ்யர்கள் ஸெக்கோஸ்லாவேகியாவிலுள்ள முக்கியமான இருப்புப்பாதை ஜங்ஷனை கோப்பை விடுவித்தார்கள். |
| | பிரிடன் உள்நாட்டு ரக்ஷகப்படைகளைக் கலைத்துவிட்டது. |
| 30—10—44 (திங்கட்கிழமை). | நேசதேசப் படைகள் பர்மாவில் புதிய தாக்குதலைத் துவக்கின. |

## (B)-செய்திச் சுருக்கம்.

**மேற்குப் போர்முனை.—**

(1) இந்த வாரத்தில் போர் ஹாலந்தில்தான் நடைபெற்றது. தென் மேற்கு ஹாலந்துப் போரிலும், ஆன்ட்வர்ப்பின் உபயோகத்தை அடைவதற்காகச் செய்த போரிலும் வெற்றி பெற்றுவிட்டோம். இந்தப் பிராந்தியத்திலிருந்து ஜெர்மனி அதிக வேகமாகப் பின் வாங்கி வருவதால் அவர்களை சந்திக்க முடியவில்லை. பிரிடிஷ் படைகள் மாஸ் நதியைத் தாண்டிவிட்டன. தெற்கு பெவிலாந்துத் தீவிலிருந்த ஜெர்மானியர்கள் துரத்தியடிக்கப்பட்டு விட்டார்கள்.

(2) **ஷெல்ட் பகுதி.**—பிரெடரிக் கோட்டையும், குரோடியம், ரெட் ராண்ச்மெண்டும் பிடிபட்டன.

(3) **பிரெடா பகுதி.**—எண்டோவனுக்கு வட மேற்கில் 22 மைல்களுக்கப்பாலிலுள்ள டில்பர்க்கும், டில்பர்குடன் ரஸ்தா மூலம் இணைக்கப்பட்டிருக்கும் வாட்டும், வடக்கு பிரபாண்டின் தலைநகரமான ஷெர் டொகென்பாஷும், ஊடன்பாஸும், ராம் ஸ்டாங்கும், ஸப்ராங்கும், கோஸும் விழுந்தன.

(4) **பெர்கன்-ஆப்-ஜூம்-ரூலண்டால் பகுதி.**—ரூலண்டால் பிடிபட்டது.

(5) **கிழக்கு பிரான்ஸ்.**—நான்ஸிக்குக் கிழக்கில் 20 மைல்கள் தூரத்திலுள்ள போரட்டிமான் கோர்ட்டிலிருந்து ஜெர்மானியர்கள் துரத்தியடிக்கப்பட்டார்கள்.

(6) **எபினலுக்கு வட மேற்கு.**—மார்டாக்னியும், பிபாண்டனும் பிடிபட்டன.

(7) **மற்ற பகுதிகள்.**—ஆசனிலிருந்து லூனுவில்லி வரையில் ரோந்து நடவடிக்கை நடைபெறுகிறது.

**ருஷ்யா.—**

(1) நார்வேயின் விடுதலை ஆரம்பித்துவிட்டது. நார்வேயின் முக்கிய துறைமுகமான கிர்கெனிஸ் பிடிபட்டது.

(2) **பெட்ஸாமோ.**—பிராந்தியத்தில் மஜாகாகா வீழ்ந்துவிட்டது.

(3) **கிழக்கு பிரஷ்யா.**—மகத்தான டாங்கி, தரைப் படைப் போர் நடைபெறுகிறது. இன்ஸ்டர்பர்க்கில் எல்லைச்சரக தற்கப்பான கம்பினனிலிருந்து எதிரிகள் அழிக்கப்படுகிறார்கள். தலை நகரமான கோனிக்ஸ்பர்க் காலி செய்யப்பட்டது.

(4) **செக்கோஸ்லாவேகியா.**—உஷோராட் என்ற முக்கியமான போக்குவரத்து மார்க்கம் விழுந்துவிட்டது.

(5) **பால்கன் நாடுகள்.**—டிரான்ஸில்வேனியா பூராவும் விடுவிக்கப்பட்டது. யூகோஸ்லாவியா கொரில்லாப் படைகள் குரோஷியாவின் தலைநகரமான ஸாக்ரேபை அடைந்துவிட்டன. ஏட்ரியாடிக் கடற்கரையிலுள்ள ஸ்பிளிட் பிடிபட்டது.

(6) **ஹங்கேரி.**—புடாபெஸ்ட்டை நோக்கி கிடுக்கித் தாக்குதல் நடைபெறுகிறது.

**இதாலி.**—கால நிலை தெளிவுபட்டு விட்டதால் நேசதேசப் படைகள் பொலோனுவை நோக்கிச் செல்ல ஆரம்பித்துவிட்டன.

**கிரீஸ்.**—லாரிஸா ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டது. ஸலோனிகா விடுவிக்கப்பட்டதென்ற செய்தி ஊர்ஜிதமாகவில்லை.

கிரீஸுக்குக் கிழக்குக் கரையிலுள்ள ஸ்கோபெலாஸ் தீவும், ரோட்ஸுக்கு சமீபத்திலுள்ள பிஸ்கோபியா ஆக்கிரமிக்கப்பட்டன.

**பிலிப்பைன்ஸ் தரைப் போர்.**—லெயிடித் தீவில் படைகள் முன்னேறி வருகின்றன. ஸான் பாப்ளோ (விமான தளம்) டாபன், பாலுட், பாருகோ, காரிகாரா பிடிபட்டன.

லெய்டிக்கு வட கிழக்கிலுள்ள விஸியாஸ் தீவுக் கூட்டத்தைச் சேர்ந்த ஸாமஸ் தீவும் அதன் தலைநகரமான காப்பலோனும் ஆக்கிரமிக்கப்பட்டன.

**பிலிப்பைன்ஸ் சமுத்திரம்.**—அமெரிக்க விமானந்தாங்கிக் கப்பல்களில் சென்ற விமானங்கள் மற்றொரு தாக்குதல் செய்து எதிரியின் கனமான ஒரு சஞ்சாரியை மூழ்கடித்தன. மற்ற இரண்டைப் பழுது படுத்திவிட்டன.

**வடக்கு பர்மா.**—சீனப் படைகள் புதிய தாக்குதலைத் துவக்கி மிட்கினு ரஸ்தா வழியாகச் சென்று ஜப்பானியர் வசமுள்ள பிரதேசத்தில் 50 மைல்கள் முன்னேறியிருக்கிறார்கள். பாமோவுக்கு வடக்கில் 24 மைல்களுள்ள மியோட்ஹிட்டும், மோகாங் மாண்டலே ரஸ்தாவிலுள்ள மோகின்யினும் ஆக்கிரமிக்கப்பட்டன. சமீப நடவடிக்கைகளில் வடக்கு பர்மாவில் 2,000 சதுர மைல்கள் கொண்ட பிரதேசம் விடுவிக்கப்பட்டது.

அக்டோபர் 28-ம் தேதியன்று ஜப்பானிய விமானங்கள் வங்காளத்தில் அரக்கான் எல்லைச் சரகத்திற் கருகில் காக்ஸ் பஜார் பேரில் குண்டுகளைப் பொழிந்தன.

நேசதேச விமானங்கள் ஜப்பானின் தலைநகரமான டோக்கியோவைத் தாக்கினவென்று நவம்பர் 1-ம் தேதி யன்று ஜப்பானிய அறிக்கை நிலயம் வெளியிட்டிருக்கிறது.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**22—10—44** (ஞாயிற்றுக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

தொழிற்சாலையும் போக்குவரத்து ஸ்தாபனங்களும்.—ஹாம் (Hamm), மன்ஸ்டர் (Munster), ஹானேவர் (Hanover), பிரன்ஸ்விக் (Brunswick).

இலக்குகள்.—மேற்கு ஜெர்மனி (Western Germany).

துறைமுகம் ரயில்வே ஸ்தலம்.—நியூஸ் (Neuss).

பீரங்கி ஸ்தாபனங்கள் துருப்புகள்.—இதாலிய (Italian) யுத்த அரங்கம்.

இரவு.—சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப் பிராந்தியங்களில்.

**தூரக்கிழக்கு (Far East).**

இலக்குகள்—பிலிப்பைன்ஸிலுள்ள லெய்ட்டி (Leyte).

ஜப்பானிய இலக்குகள்.—பிலிப்பைன்ஸ் (Philippines).

இலக்குகள்—செபு (Cebu), பாகோலாட் (Bacolod).

**பர்மா (Burma).**

துறைமுகங்கள் களஞ்சியங்கள்.—மோல்மீன் (Moulmein).

ஜப்பானிய இலக்குகள்.—கென்னடி (Kennedy), இதர பிரதேசங்கள்.

**23—10—44.** (திங்கட்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—கப்பல்கள்.—நார்வே (Norway).

ராணுவ இலக்குகள்—மேற்கு செக்கோஸ்லாவாக்கியா (Czechoslovakia), மியூனிச் (Munich), ஆக்ஸ்பர்க் (Augsburg), ரீகென்ஸ்பர்க் (Regensburg).

இலக்குகள்.—ஹாலந்திலும் (Holland), ஜெர்மனியிலும் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்

எதிரி ஸப்ளை போக்குவரத்துகள் நீராவி யந்திரங்கள், இதர இலக்குகள்.—வட இதாலி (Northern Italy).

எதிரிக் கப்பல்கள்.—ஏட்ரியாடிக் (Adriatic).

விமானச் சண்டைகள்.—கிழக்கு யுத்த அரங்கம் முழுவதும். (47 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன.)

இரவு.—தொழிற்சாலை ரயில்வே ஸ்தலம்.—எஸ்ஸன் (Essen).

**தூரக்கிழக்கு (Far East).**

இலக்குகள்—பாராமுஷிரோ (Paramushiro), அமாகுடான் (Amakutan).

ஜப்பானிய சண்டைக் கப்பல்கள்.—பிலிப்பைன்ஸ் (Philippines).

**பர்மா (Burma).**

உதவிகள்—டிடிம் (Tiddim) ரஸ்தாவின்மேலுள்ள தரைப் படைகள்.

படகுகள்.—சிண்ட்வின் (Chindwin).

**24—10—44.** (செவ்வாய்க்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—எதிரிக் கப்பல்கள்.—நார்வீஜியன் (Norwegian) கடற்கரை.

பாலங்கள், போக்கு வரத்துகள்.—போ (Po) சமவெளி.

ரஸ்தா, ரயில் போக்குவரத்துகள், இலக்குகள்.—ஹாலந்து (Holland), மேற்கு ஜெர்மனி (Western Germany).

பீரங்கி ஸ்தாபனங்கள் துருப்பு முகாம்கள்.—ஹாலந்தில் (Holland), யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

விமானச் சண்டைகள்.-கிழக்கு யுத்தஅரங்கம்.

இரவு.—இலக்குகள்—ஹனோவர் (Hanover), மேற்கு ஜெர்மனி (Western Germany).

சுரங்க வெடி பாவுதல்.—எதிரி ஜலப் பிராந்தியங்களில்.

கப்பல்கள்.—எட்ரியாடிக் (Adriatic).

ரஸ்தா, ரயில் போக்குவரத்துகள்.—யூகோஸ்லாவியா (Yugoslavia), ஆல்பேனியா (Albania).

**தூரக்கிழக்கு (Far East).**

தரைமீதுள்ள ஸ்தாபனங்கள், ஸப்ளைக் குவியல்கள், ஸப்ளை லயன்கள்.—பிலிப்பைன்ஸிஉள்ள லெய்டி (Leyte).

விமான நிலயங்கள்.—விஷாயாஸ் (Visayas), வடக்கு மின்டானோ (Northern Mindanao).

ஜப்பானியக் கப்பல்கள்.—பிலிப்பைன்ஸ் (Philippines).

இவோஜிமா (Iwojima), வல்கனோ (Volcano).

**பர்மா (Burma).**

எதிரி சைனியங்கள்.-காலிமியோ (Kalemyo), பின்லெபு (Pinlebu).

படகுகள்.—சிண்ட்வின் (Chindwin).

இலக்குகள்.—மித்தா (Myittha) சமவெளி.

**25—10—44.** (புதன்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.-ரயில்வே தளங்கள்-ஹாம் (Hamm), ஹாம்பர்க் (Hamburg), ஹார்பர்க் (Harburg).

எண்ணெய்க் கிணறு, ஸ்தாபனங்கள்.—

இதர ராணுவ இலக்குகள்.—வடமேற்கு ஜெர்மனி (N. W. Germany).

தொழிற்சாலை இலக்குகள்.—பீல்பீல்ட் (Bielefield), மன்ஸ்டர் (Munster), ஹனோவர் (Hanover), ஜெர்மனியில் இதர இடங்கள்.

ஜெர்மனி தொழிற்சாலைகள்.—லிவர்குசன் (Leverkusen).

போக்குவரத்துகள், பாலங்கள்.—போ (Po) நதிப் பிரதேசம்.

பீரங்கி ஸ்தாபனங்கள்.—இதாலியில் யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

விமானச் சண்டைகள்.—கிழக்கு யுத்த அரங்கம் முழுவதும். (37 எதிரி விமானங்கள் நாசமாக்கபட்டன).

**தூரக்கிழக்கு (Far East).**

இலக்குகள்.-பாராமுஷிரோ (Paramushiro), மட்சுவா (Matsuwa), ஷாமுஷு (Shumusshu), ஆன்ஸ்கோடன் (Onnskotan), குரைல்ஸ் (Kuriles).

பாதைகள், படகுகள்.—வடக்கு பாலா (Palau) தீவு.

ஜப்பானிய இலக்குகள்.—மார்ஷல்ஸ் (Marshalls).

ரிபேர் செய்யுமிடங்கள்.—ஜப்பானில் உள்ள ஓமுரா (Omura).

**பர்மா (Burma).**

எதிரி சைன்யங்கள்.—அரக்கான் (Arakan).

படகுகள்.—லோயர் சிண்ட்வின் (Lower Chindwin).

ரயில்வேக்கள்—பாலீயக் (Paleik).

இலக்குகள்.—ஈயூ (Yeu).

**26—10—44** (வியாழக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—ஜெர்மனி மேல் விமானத் தாக்குதல் நடத்தியதால் ஒரு தகவலும் இல்லை.

போக்குவரத்துகள், இதர இலக்குகள்.—வட இதாலி (Northern Italy).

விமானச் சண்டைகள்.—கிழக்கு யுத்த அரங்கம் முழுவதும் (19 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

**தூரக்கிழக்கு (Far East).**

விமான நிலயங்கள், போக்குவரத்துகள்.—டிமோர் (Timor), நியூ கினியா (New Guinea).

எதிரி முனைகள்.—லெய்டி (Leyte).

ஜப்பானியக் கப்பல்கள்.—தென் சீனக் கடல்.

**பர்மா (Burma).**

ரயில் ரோட்.—ஸீடா (Sedaw).

எதிரி பீரங்கி ஸ்தாபனத் துருப்புகள்.—கென்னடி (Kennedy).

27—10—44. (வெள்ளிக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—தொழிற்சாலை இலக்குகள்—ஹனோவர் (Hanover), மன்ஸ்டர் (Munster), பீல்பீல்டு (Bielefield).

போக்குவரத்துகள், பீரங்கி ஸ்தாபனங்கள், இதர இலக்குகள்.—ஹாலந்தில் யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

பாலங்கள்.—வட இதாலி (North Italy).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—கிழக்கு யுத்த அரங்கம் முழுவதும். (52 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

இரவு.—சுரங்க வெடி பாவுதல்—எதிரி ஜலப் பிராந்தியங்களில்.

**தூரக்கிழக்கு (Far East).**

நாசகாரி கப்பல்கள்.—செபு (Cebu).

டாங்கர்.—பாலாவான் (Palawan).

கிராமம், விமான நிலயம்.—டிமோர் (Timor).

**பர்மா (Burma).**

போக்குவரத்துக்கள்.-மத்திய பர்மா (Central Burma), தென் பர்மா (South-Burma).

ரயில்வேப் பாலம்.—பின்மானா (Pyinmana).

விமான நிலயம்.—காங்காங் (Kangaung).

ரஸ்தா சந்திப்பு.—மின்கின் (Mingin).

எதிரிக் கடற்கரைகள் படகுகள்.—அரக்கான் (Arakan).

எதிரி சைனியங்கள்.-கென்னெடி (Kennedy).

28—10—44. (சனிக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—தொழிற்சாலை, இலக்குகள்—கோலோன் (Cologne).

ரயில்வே ரஸ்தா, போக்குவரத்துகள்.—வட கிழக்கு ஆக்கன் (N. E. of Aachen).

ரயில் தளங்கள்.—ஹாம் (Hamm).

சேனைகள் யுத்த தளவாடகள் தயார்செய்து சேமிக்குமிடங்கள்.—மன்ஸ்டர் (Munster).

பீரங்கி ஸ்தாபனங்கள்.—வால்சரன் (Walcheren).

விமானத் தொழிற்சாலை.—லாஙகன்பர்ட் (Longenfurt).

ரயில்வே இலக்குகள்.—போ (Po) சமவெளி.

கப்பல்கள்.—டால்மேஷியன் (Dalmatian) கடற்கரை.

ரயில்வே பாலங்கள்.—ரூர் (Ruhr), ரைன்லாந்து (Rhineland).

போக்குவரத்துகள்.—ஹாலந்து (Holland).

இரவு.—இலக்குகள்—ஜெர்மனியில் உள்ள கொலோன் (Cologne).

**தூரக்கிழக்கு (Far East).**

விமான நிலயம்.—புவூரெட்டா, பிரின்ஸெஸா (Puerta-Princesa).

(23 ஜப்பானிய விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

ஜப்பானியக் கப்பல்கள்.—போர்னியோ (Borneo).

இதர விமான நிலயங்கள்.—தென்மேற்கு பஸிபிக் (South-West Pacific).

ஜப்பானியச் சைனியங்கள்.—பிலிப்பைன்ஸ் (Philippines).

**பர்மா (Burma).**

எதிரி சைனியங்கள்.—சிண்ட்வின் (Chindwin).

துவியல்கள்.—அரக்கான் (Arakan).

பாலங்கள் ரயில்வேக்கள்.—வடக்கு பர்மா, மத்திய பர்மா.

விமான நிலயங்கள்.—மத்திய பர்மா.

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

23—10—44. (திங்கட்கிழமை).

**பிரிடன் (Britain),**

**ருஷ்யா (Russia).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**தூரக்கிழக்கு (Far East).**

பிலிப்பைன்ஸிலுள்ள லெய்டி (Leyte).

24—10—44. (செவ்வாய்க்கிழமை).

**பிரிடன் (Britain).**

சில இடங்கள்.—தென் இங்கிலாந்து லண்டன் பிரதேசத்தைச் சுற்றிலும்.

**ருஷ்யா (Russia.)**

எதிரி விமான நடவடிக்கையில்லை.

**தூரக்கிழக்கு (Far East).**

அமெரிக்கக் கப்பல்கள்.—லெய்டியில் (Leyte) இறங்குபவை.

25—10—44. (புதன்கிழமை).

**பிரிடன் (Britain).**

சில இடங்கள்.—தென் இங்கிலாந்து.

**ருஷ்யா (Russia).**

ஒரு தகவலும் இல்லை.

**தூரக்கிழக்கு (Far East.)**

அமெரிக்க யுத்தக் கப்பல்கள்.—ஜப்பானியக் கப்பல்களைத் தாக்குபவை.

26—10—44. (வியாழக்கிழமை) to
27—10—44. (வெள்ளிக்கிழமை).

**பிரிடன் (Britain),**

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

28—10—44. (சனிக்கிழமை).

**பிரிடன் (Britain).**

ஒரு தகவலும் இல்லை.

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

29—10—44. (ஞாயிற்றுக்கிழமை).

**பிரிடன் (Britain),**

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

# யுத்தக் குறிப்புகள்.

**அதோகதி.** பருவகாலங்கள் மாறிவருகின்றன. ஆர்க்டிக்கில் கடல் பனிக்கட்டியாகிவிட்டது. ஹாலந்தில் மண்ணும், சகதியும் உண்டாகிவிட்டது. இதாலியில் புயல் அடிக்கிறது. ஆகிலும் ஹிட்லரின் துரதிருஷ்டத்தில் ஒரு மாறுதலும் ஏற்படவில்லை. அவன் பின்வாங்குவது ஓயவில்லை. பருவகால நிலைமையினால் நேசதேசப்படையின் முன்னேற்றம் சற்று தடைப்பட்டாலும், ஒவ்வொரு முனையிலும் கடும்போர் நடைபெறுகிறது. இந்த வாரத்தில் அச்சு நாட்டாரின் ஆக்கிரமணத்துக்குட்பட்ட நாடுகளில் இரண்டு விடுதலைபெற நடவடிக்கை ஆரம்பமாகிவிட்டது. ஆர்க்டிக்கில் நார்வேயும், மத்திய பசிபிக்கில் பிலிப்பைன்ஸும் விடுவிக்கப்படுகின்றன. பெல்கிரேட், சாக்ரப் என்ற இரண்டு தலைநகரங்கள் விடுவிக்கப்பட்டன. பல்கேரியா யுத்த நிறுத்த ஷரத்துகளில் கையொப்பமிட்டுவிட்டது. ஆஸ்திரியாவில் உள்நாட்டுப்படை எதிர்ப்பு ஏற்படும் அறிகுறிகள் தோன்றிவிட்டன.

வி வி வி வி வி

**நிறைவேற்றுவது.** சிநேகிதர்களுக்கும், விரோதிகளுக்கும், நேசதேசத்தார்கள் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் காலம் வந்துவிட்டது. இரண்டு வருடங்களுக்குமுன் பிலிப்பைன்ஸ் தீவுகளுக்குத் திரும்பிவந்துவிடுவதாக ஜனாதிபதி ரூஸ்வெல்ட் வாக்களித்தார். அவ்விதம் வந்துவிட்டார். கிரீஸுக்கு அளித்த வாக்குறுதியை பிரிடனும் நிறைவேற்றிவிட்டது. இதாலி, கிரீஸ், பிரான்ஸின் தைரியத்தை கௌரவிப்பதாக மிஸ்ட்டர் சர்ச்சில் வாக்களித்தபடி, அதன் தாத்காலிகமான நிர்வாகங்களை ஒப்புக்கொண்டுவிட்டார். பிரிடனும், அமெரிக்காவும் எதிரிகளைத் தரையிலும், கடலிலும், ஆகாயத்திலும், நையப்புடைப்போமென்று சொன்னபடியே நடத்திக்காட்டி விட்டார்கள். ஜெர்மன் படைகள் தாய்நாட்டிற்குச் சுருண்டு ஓடுகின்றன. மகத்தான ஒரு துணைக்காவல் கப்பல் கூட்டம் யாதொரு தொந்திரவுமின்றியிலும் அட்லாண்டிக் கடலைத்தாண்டி இங்கிலாந்துக்கு வந்துவிட்டன. ஜப்பானியக் கடற்படையின் பாதிபாகம் மூழ்கடிக்கப்பட்டுவிட்டது. ஜெர்மன் விமானப்படை மறைந்துவிட்டது. அதற்கு பதிலாக ஓட்டியில்லாத விமானங்கள் தோன்றிவிட்டன.

வி வி வி வி வி

**நிறைவேற்றப்படாத வாக்குறுதிகள்.** ஒன்று அல்லது இரண்டு வாக்குறுதிகள் நிறைவேறாமல் பாக்கியிருக்கின்றன. பெர்லினைப் படையெடுப்பதும், டோக்கியோ பேரில் பாய்வதும்தான் பாக்கியிருக்கின்றன. அவைகளை பூர்த்திசெய்ய நாம் நடவடிக்கையைத் துவக்கிவிட்டோம். எல்லைப்புற தற்காப்புகள் பலமாகத்தானிருக்கும் என்று எதிர்பார்க்கவேண்டும். ஆனால் இவைகள் கடினமான தோலிகளே. அவைகளைப் பிளந்துவிட்டால் உள்புறம் பூராவும் அழுகியிருக்கும் என்பதற்கு அறிகுறிகள் காணப்படுகின்றன. உள்நாட்டு ரக்ஷகப்படைகளும், ஹிட்லரின் கூக்குரலும் பெர்லினைக் காப்பாற்ற முடியாது. ஜெர்மனி நிபந்தனையற்ற சரணாகதி செய்தால்தான் அதற்கு கதிமோக்ஷமே என்று மிஸ்ட்டர் சர்ச்சிலும், ஜனாதிபதி ரூஸ்வெல்டும் ஸ்டாலினும் இந்த வாரத்தில் சொல்லிவிட்டார்கள்.

வி வி வி வி வி

**அறிகுறிகள்.** சகுனங்களுக்கு உண்மையான பிரயோஜனமிருந்தால் ஆகனின் வீழ்ச்சி கெடுதலை சூசிப்பிக்கிறது. ஆக்கனில் ஜெர்மன் சாம்ராஜ்யத்தின் தலைநகரமிருந்தது. அதில் ஜெர்மன் சக்கரவர்த்திகள் முடிசூட்டிக் கொண்டார்கள். ஆக்கனின் வீழ்ச்சி ஜெர்மனியின் வீழ்ச்சியையும், ஜெர்மன் சாம்ராஜ்ய ஆசையின் அழிவையும் சூசிப்பிக்கிறது.

வி வி வி வி வி

**கடவுளின் திருவருள்.** கடவுளின் சித்தம் விசித்திரமானது. ஹிட்லரின் குற்றக் கூட்டத்திலிருந்து அவனை அழிக்கும் ஆயுதம் தோன்றிவிட்டது. கொஞ்சகாலத்துக்குமுன் ஹிட்லர் விமானத்தாக்குதல்மூலம் பிரிடனிலுள்ள ஆயிரக்கணக்கான வீடுகளை அழித்துவிட்டான். அந்தக் கட்டடத்தூள்களைக்கொண்டுதான் நார்மண்டியில் படைகள் இறங்குவதற்கும், அங்கிருந்து ஜெர்மனியைத் தாக்குவதற்கும் சாதகமுள்ள நூதனமானத் துறைமுகங்களை அமைக்க சாமகிரியைகள் தயாரிக்கப்பட்டன.

ஆவலுள்ளவர்களுக்கு மற்றொரு ருசிகரமான சம்பவத்தைக் கோருவோம்.

"நாலாப்பக்கங்களிலும் பிரளயம் பொங்கி வரும்பொழுது ஹிட்லர் மலையைப் போல் இருந்துவருகிறான் என்று பயங்காளியான டாக்டர் கோயபல்ஸ் சொல்லிவருகிறான். அவன் இப்பொழுது பொம்மைக் கருவிகளை நம்பியிருக்கிறான். அவைகள் புதிய ஆயுதங்கள் என்று சொல்லப்படுகிறது மேலும் பயிற்சியற்ற சங்காளிக் கூட்டத்தாருள்ள ஒரு சேனையும் அவர்களுக்கு உதவுமாம்.

இதற்குமாறாக ஏற்கனவே படை பலமிருந்த நேசதேசக்கக்ஷியில் அநேக தேசத்துப் படைகள் குவிந்து வருகின்றன. விடுதலைபெற்ற பிரான்ஸ், இதாலி, பெல்ஜியம், ஹாலந்து, கிரீஸ், யூகோஸ்லாவியா, பல்கேரியா, ருமேனியா, முதலிய நாடுகளிலிருந்தும் படைகள் குவிந்து வருகின்றன.

வி வி வி வி வி

**ஹாலந்து போர்.** ஹாலந்துக்கான போர் முடிவடைந்துவிட்டது. இந்த பிராந்தியத்திலிருந்து ஜெர்மன் படைகள் வாபஸாவதாகச் சொல்லப்படுகிறது. நேசதேசப் படைகள் மாஸ் நதியைத் தாண்டிவிட்டன. ஷெல்ட் பகுதியை ஜெர்மனி உதறிவிட்டது. கடல் மூலமாக படைகள் சென்று வால்கர்ன் தீவில் இறங்கிவிட்டன. ஆண்ட்வெர்ப் துறைமுகம் அழிவு படாமல் நமது உபயோகத்துக்கு வந்துவிட்டது.

இந்த நிலைமை ஏற்பட்டதற்கு ஹாலந்தில் வடக்கு முகமாக நேசதேசப்படைகள் முன்னேறி, ஆண்ட்வெர்ப்புக்கு எதிர்த்த பக்கத்திலுள்ள பிரெஸ்கன்ஸையும், பிளஷிங்கையும் மாஸ் நதிக்குத் தெற்கிலுள்ள ரஸ்தாக்களும் இருப்புப்பாதைகளும் கூடுவதும், ஜெர்மானியர்கள் 5 லக்ஷம் துருப்புகளை வைத்திருந்ததுமான இடமான ஷெர்டோகென்பாஷையும், முக்கியமான கேந்திரஸ்தானங்களான வாட்டையும் டில்பரியையும் கைப்பற்றியதுதான் காரணங்களாகும். கடைசியாக வந்த செய்திகளில் தென்மேற்கு ஹாலந்திலுள்ள ஜெர்மன் தற்காப்பு அரணை ரோசண்டால் விழுந்துவிட்டதென்று சொல்லப்படுகிறது.

வி வி வி வி வி

**வடமேற்குப் போர்முனை.** அக்டோபர் 31-ம் தேதி வெளிவந்த டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகையில் மேற்குப் போர்முனையில் நேசதேசத்தாரின் யுத்த தந்திரம் விமர்சனம் செய்யப்பட்டிருக்கிறது. "மேற்குப் போர்முனையில் தெற்கு ஹாலந்திலும், ஷெல்ட் நதிப் பகுதியிலும் போர் நடைபெற்றது. ஷெல்ட் நதியின் முகத்துவாரத்தில் ஆண்ட்வெர்ப்புக்குப் போகும் மார்க்கத்தைக் கைப்பற்ற நேசதேசத்தார்கள் வெற்றிகரமாகத் தாக்கி வந்தார்கள். பிரெஸ்ஸல்ஸிலும், பிரெடரிக் ஹெண்ட்ரிக்கிலும் உள்ள எதிரியின் கடற்கரை பீரங்கிகள் அந்த வழியைத் தற்காப்பு செய்து வந்தன. நதியின் முகத்துவாரத்துக்கு இரு பக்கத்திலும் வால்சேரினிலும், பெவிலாந்திலும் எதிரிகள் பீரங்கிகளை வைத்திருக்கிறார்கள். ஹாலந்திலுள்ளவர்களுக்கு உதவிப் படைகளைக் கொண்டுவரும் கப்பல்களுக்கு அவைகள் அபாயம் உண்டுபண்ணின. இந்தப் பீரங்கிகளை நொறுக்கும் வேலை திருப்திகரமாக நடைபெற்றது. கனடியர்கள் வாடர்விலியட்டுக்கும், ஹூப்ட்ப்ளாடடுக்கும் மத்தியிலிருந்து வடமேற்கு முகமாக முன்னேறி பிரெஸ்கன்ஸையும் ஹெண்ட்ரிக் கோட்டையையும் பிடித்தார்கள். நதியின் முகத்துவார பிரதேசத்தின் வடக்குப் பக்கத்தில் கனடியர்கள் கிலீவ்லாந்து தீபகற்பத்தின் கழுத்தில் தங்களுடைய பிடிப்பை வலுப்படுத்திக்கொண்டார்கள். அங்கு கடல் மூலமாக பிரிடிஷ் படைகள் இறங்கியிருந்தன. அங்கிருந்து கனடியர்கள் பெவிலாந்திலும், வால்சேரினிலுமுள்ள 12,000 ஜெர்மன் துருப்புகளுக்கு அபாயம் உண்டுபண்ணுவதற்காக அநேக மைல்கள் முன்னேறினார்கள். அதே சமயத்தில் மற்ற கனடியர்கள் பெவிலாந்து நடை பாதையை நோக்கியுள்ள வோயண்ட்ஸ்டிரெக்டிலிருந்து வடக்கு நோக்கி எதிரிகளைத் துரத்திக்கொண்டு பெர்கன்-ஆப்-ஆமுக்கு முன்னேறினார்கள்.

வி வி வி வி வி

**நெருக்கடி.** தெற்கு ஹாலந்தில் மாஸுக்குத் தெற்கில் எதிரி பலமாகத் தாக்கப்பட்டான். இதில் இரண்டு லக்ஷியங்கள் உண்டு. ஒன்று, பெல்ஜிய எல்லைச்சரகத்துக்கு வடக்கிலும், வடக்குக் கடலுக்குச் செல்லும் நதிகளுக்குத் தெற்கிலுமுள்ள பிராந்தியத்திலிருந்து 60,000 ஜெர்மானிர்களைப் பின்வாங்கவொட்டாமல் துணிப்பது. இரண்டு, ஷெல்ட் பகுதியிலுள்ள நேசதேச சேனைகளுடன் தொடர்ப்பு ஏற்படுத்திக்கொள்ளுவது. ஆர்ன்கெமில் விமான மூலம் படைகளிறங்கியபின் ஏற்பட்ட நெருக்கடியான சமயங்களில் மார்க்கத்தை பரவச்செய்வதின் மூலம் ஜெனரல் டம்ப்ஸியின் படைகள் இந்த லக்ஷியங்களை நிறைவேற்றி வருகின்றன. பெல்ஜியன் எல்லைச்சரகத்திலுள்ள டார்ண் ஹொர்ட்டுக்குக் கிழக்கிலுள்ள 30 மைல் விஸ்தீர்ணமுள்ள இந்த மார்க்கம் வடகிழக்கு நோக்கி ஆர்ன்கெமுக்குச் செல்லுகிறது. இந்த மார்க்கத்தின் இருபக்கத்திலும் ஜெனரல் டிம்ப்ஸியின் படைகள் விசிறிபோன்று பரவி வருகிறார்கள். இரண்டு வாரங்களுக்குமுன் அந்தப் படைகள் வென்ரேஜ், ட்யூர்னி, வென்லோவைப் பிடித்துக்கொண்டு

மான் நதிக்கரையை அடைந்தன. சென்ற வாரத்தில் அவைகள் மேற்கு முகமாகவும் வட மேற்கு முகமாகவும் முன்னேறி யூட்ரெக்ட், நீஜ்மேகனுக்கும் போகும் போக்குவரத்து நிலயமான ஷெர்டோ கென்பாஷை வளைத்துக்கொண்டார்கள் இவைகளுக்குப் பலமாக ஆண்ட்வெர்ப் பிராந்தியத்திலிருந்து பிரேடாவையும், டில்பர்க்கையும் நோக்கி இரண்டு தாக்குதல்கள் செய்யப்பட்டன. இந்தப் போரில் எதிரி தோல்வியுற்றான். இந்தத் தாக்குதல்களை நாம் ஆராய்ச்சி செய்தால் டர்ன்ஹோர்ட் ஆர்ன்கெம் மார்க்கத்திற்கும் வடக்குக் கடலுக்கும் மத்தியிலுள்ள எதிரியை நேசதேசப் படைகள் கடுமையாகத்தாக்கி வருகின்றன என்று நன்றாய் விளங்கும்.

வி வி வி வி வி

**கிழக்குப் போர்முனை.** தூரவடக்கில் ருஷ்யர்கள் பின்லாந்து வழியாக நார்வேக்குள் ஊடுருவிச் சென்றுவிட்டார்கள். நார்வேயிலுள்ள கிர்கனிஸ் என்ற முக்கியமான துறைமுகம் விடுவிக்கப்பட்டது. இதன் மூலம் பினலாந்திலிருந்து ஜெர்மானியர் தப்பி ஓடும் மார்க்கம் அடைபட்டுவிட்டது. நார்வேயின் மன்னரான ஹாகன் நேசதேசத்தார் கக்ஷியில் சேர்ந்துகொண்டு எதிரியை வெளியே துரத்தியடிக்கும்படி ஜனங்களுக்கு ஒரு செய்தியை அனுப்பியிருக்கிறார். அதன் மூலம் ஆர்க்டிக் மார்க்கமாக பிரிடனிலிருந்து ருஷ்யாவுக்குச் செல்லும் ஸப்ளைகளுக்கு ஏற்பட்டிருந்த ஆபத்து நீங்கிவிட்டது. இந்தப்பகுதியில் நார்வே மலைப் பிரதேசமானதாலும் ஆர்க்டிக்கில் பனி வர்ஷிப்பதாலும் ருஷ்யரின் முன்னேற்றம் நின்றுவிடும்.

பின்லாந்து பகிரங்கமாக ஜெர்மனியுடன போர் தொடுக்காவிட்டாலும் அவர்களுக்குள் மனஸ்தாபம் உண்டாகிவிட்டது. அவர்கள் பின்லாந்திலுள்ள எஞ்சிய ஜெர்மன் படைகளைத் தாக்கி அழித்துவருகிறார்கள்.

கிழக்கு பிரஷ்யா போர்முனையில் ருஷ்யர்கள் மூன்று திசைகளில் முன்னேறுகிறார்கள். அவற்றில் முக்கியமான நடவடிக்கை மெமலுக்குமுன் இன்ஸ்டர்பர்க் வெளி வழியாக நடைபெறுகிறது. இன்ஸ்டர்பர்க்கின் படைகளின் எல்லைப்புற தற்காப்பு அரணை கம்பினன் அழிக்கப்படுகிறது. இங்கு ஹிட்லர் ஏராளமான படைகளைக் குவித்திருக்கிறான் கிழக்கு பிரஷ்யப் போரில் ஜெர்மனியின் முடிவு தீர்மானிக்கப்படுமென்று அவன் அறிவான். இதுதான் கிழக்குப்பக்கத்தில் அவனுடைய கடைசி அரண். இங்கு தற்காப்புகள் 60 மைல்கள் கனத்துக்கு அமைக்கப்பட்டிருக்கின்றன. அதில் மூன்று வரிசைகளாக கோட்டைகளமைக்கப்பட்டிருக்கின்றன. அதைச் சுற்றிலுமுள்ள விசாலமான பரப்பிலுள்ள ஜனங்கள் அப்புறப்படுத்தப்பட்டு விட்டார்கள். ருஷ்யப்படைகள் ஒரு பொது ஜனங்களையும் காணக்கூடவில்லை. எங்கு பார்த்தாலும் எஃகு, காங்கிரீட் கோட்டைகளாகக் காணப்படுகின்றன.

ஹங்கேரிய யூகோஸ்லாவிய போர்முனையில் மூன்று ஒன்றுபட்ட தாக்குதல்கள் நடைபெறுகின்றன. ஒன்று கார்பேதியன் மலைகளின் வடக்கு, தெற்குப் பக்கங்களிலிருந்து ஸ்லவேகியா பேரில் இடுக்கித்தாக்குதல், இரண்டாவது, தெற்கு டிரான்ஸில்வேனியாவில் கடினமான பிரதேசத்தின் வழியாக ஹங்கேரிய சமவெளியை நோக்கி விசாலமான போர்முனையில் தாக்குதல், மூன்றாவது, டான்யூப் நதியின் தெற்குப்பகுதியில் மோராவியா பள்ளத்தாக்கை நோக்கி முன்னேறுகிறது.

இதன் விளைவுகள் பின்வருமாறு :—ருமேனியாவிலும், பல்கேரியாவிலும் உள்ள ருஷ்யப் படைகள் பால்கன் தீபகற்பத்தின் குறுக்கே துரிதமாக முன்னேறுகின்றன. அவைகள் டிடோவின் படைகளுடன் சேர்ந்துகொண்டு ஏட்ரியாடிக் கடலிருந்து வடக்கு யூகோஸ்லாவியா, புடாபெஸ்ட், ஸ்லாவேகியா வழியாக கார்பேதியன் மலைகளின் வடக்குப்பக்கத்திலுள்ள கிராகோ வரையிலும் ஒரு புதிய போர் முனையைத் துவக்கிவிட்டார்கள். இந்தப் போர்முனை ஏற்பட்ட பின ஆஸ்திரியாவுக்கு ஆபத்து உண்டாகிவிடும். ஜெர்மனியின் கிழக்கு தற்காப்புகள் நொருங்கிவிடும்."

இவ்விதமாக 1,500 மைல் போர் முனையில் ருஷ்யப்படைகள் அநேக கேந்திர ஸ்தானங்களில் முன்னேறி ஜெர்மனியை வளைத்து வருகின்றன.

வி வி வி வி வி

**இதாலியப் போர்முனை.** சகதியையும், மனிதர்களையும் எதிர்த்து நேசதேசப்படைகள் போராடுகின்றன. மலைபிராந்தியப்போரில் சப்ளைகளைக்கொண்டு போவது கஷ்டசாத்யமானது. ஆகிலும் விடாமுயற்சியுடன் ஜெனரல் மாண்ட் காமரி ப்ளாரென்ஸ், பார்லி ரஸ்தா வழியாக லாம்பார்டி சமவெளிக்குச் செல்லுமுன் எதிரியின் எல்லைச் சரக தற்காப்புகளான பொலோனுவையும் ராஸனுவையும் நோக்கி முன்னேறுகிறார்கள்.

வி வி வி வி வி

**கிரீஸ்.** கிரீஸையும் மத்தியதரைக்கடலிலுள்ள தீவுகளையும் காலி செய்துவிடுவதாக ஹிட்லர் உத்தேசித்துவிட்டான்.

முஸோலினிக்கு அனுபவம் ஏற்பட்டது போல் ஹிட்லரும் வலையில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறான். கிரீட், ரோட்ஸ், ஏஜியன் கடலிலுள்ள மற்ற தீவுகளிலுள்ள 23,000 ஜெர்மானியர்களை எவ்விதம் அப்புறப்படுத்துவதென்பது தான் அவனுடைய மகத்தான பிரச்னை. கிரீஸிலிருந்தும் ஆல்பேனியாவிலிருந்தும் வந்த 20,000 ஜெர்மானியர்கள் ஆல்பேனியாவின் எல்லைச் சரகத்தில் கூடிக்கொண்டு சாராஜெவோவை நோக்கிச் செல்லத் துடித்துக்கொண்டிருக்கிறார்கள். பாஸ்னியா, ஹெர்ஸிகோவினா, சாஞ்சாக், மாஸிடோனியாவிலிருந்தும் ஜெர்மன் படைகள் சாராஜெவோவுக்கு வந்துவிட்டன. எப்படி ஜெர்மனிக்குச் செல்லுவதென்பது தான் அவர்களின் பிரச்னை.

இந்தச் சமயத்தில் கிரீஸின் விடுதலையும் பூர்த்தியாகி வருகிறது. கடைசியாக லாரிஸா விடுவிக்கப்பட்டது.

வி வி வி வி வி

**பிலிப்பைன்ஸுக்குக் கருகில் கடற் போர்.** இந்தப் போரைப்பற்றி உபரித் தகவல்கள் கிடைத்திருக்கின்றன. "ஜப்பானியப் படைகள் முறியடிக்கப்பட்டு, பலமாகப் பழுதுபட்டதுடன் அவைகள் துரத்தியடிக்கப்பட்டன" என்று சொல்லப்படுகிறது. "இது மகத்தான தோல்வி" என்று மாக் ஆர்தர் சொல்லுகிறார், அமெரிக்க கடற்படையின் சேனாதிபதியும் கடற்போரின் சியந்தாவுமான கடற்தளபதி D. J. கிங்ஸ் "ஜப்பானியக் கடற்படையின் பாதிபலம் அழிக்கப்பட்டுவிட்டது" என்று சொல்லுகிறார். எனவே, இந்த நடவடிக்கை மூலம் பசிபிக்கில் ஜப்பானின் பத்திரத்துக்கு மீளமுடியாமல் அழிவு ஏற்பட்டுவிட்டது. இந்தச் செய்தியைக் கேட்டவுடன் டோக்கியோ பின்வருமாறு ஒலிபரப்பியது. "யுத்த நிலைமை நம்பிக்கையுடனிருப்பதற்கு இடந்தரவில்லை. நிலைமை நமக்கு பாதகமாகத் திரும்பிவிட்டது. அமெரிக்கர்கள் ஏராளமான படைகளைக் குவித்து வருகிறார்கள்". ஜப்பானிய பிரிவிகௌவுன்ஸிலும், நிர்வாக சபையும், உற்பத்தி சொஸைடிகளும் அவசரக் கூட்டங்களைக் கூட்டின. ஜப்பானிய நிர்வாகத்தில் மாறுதல்கள் ஏற்படக்கூடும். மூவர் ஒப்பந்தத்தை ஆக்ஷேபித்த கோனாயி பிரதம மந்திரி பதவியை வகிக்கலாம்.

இந்த வெற்றி ரூஸ்வெல்டின் தேறுதல் நடவடிக்கைக்கு உதவியளித்துவிட்டது. பஸிபிக் யுத்தத்தைத் துரிதமாக நடத்தவில்லையென்று ரூஸ்வெல்டு பேரில் புகார் சொன்னவர்கள் தங்களுடைய தவறுதலை இப்பொழுது உணருகிறார்கள்.

கடற்போரைப் பற்றிப் பின்கண்ட விவரங்கள் குறிக்கப்படுகின்றன :—

அக்டோபர் 23-ம் தேதியன்று இரண்டு ஜப்பானிய கடற்படை தென்பட்டது. பிலிப்பைன்ஸைச் சேர்ந்த மிண்டொரோவுக்குத் தெற்கில் சிபூயன் கடல் வழியாகச் சென்ற கடற்படையை நேசதேச விமானங்கள் அடிக்கடி தாக்கின. மற்றொரு கடற்படை ஹக்ராஸ் தீவுக்கு தென்மேற்கில் சிபூக் கடலுக்கருகில் தென்பட்டது, அந்தப் படைகளிலிருந்த இரண்டு கப்பல்கள் பேரில் வெடிகுண்டுகள் வீசப்பட்டன. அன்றைய தினமே ஜப்பானிலிருந்து வந்த மற்றொரு கடற்படை பார்மோஸாவுக்குத் தென்கிழக்கில் தென்பட்டது.

அக்டோபர் 21-ம் தேதியன்று நேசதேச விமானப்படையும், யுத்தக்கப்பல்களும், நீர் மூழ்கிகளும் ஜப்பானியக் கப்பற்படையைத் தாக்கின. ஜப்பானியப்படை பின்வாங்கி ஓடிவிட்டது.

பசிபிக் கடற்படையின் தலைவரான கடற்தளபதி சென்டர் நிமிட்ஸ் சொல்லுகிறபடி ஜப்பானின் 58 யுத்தக்கப்பல்கள் பிலிப்பைன்ஸுக்கருகில் மூழ்கடிக்கப்பட்டன அல்லது பழுதாக்கப்பட்டன. இந்தப் புள்ளி விவரங்களும் மாறுதலுக்குட்பட்டவை, போரில் ஈடுபட்ட எதிரியின் கப்பல்களில் இரண்டு கப்பல்கள்தான் பழுதுபடாமல் தப்பிச்சென்றன.

தொடர்ச்சியாக நடைபெற்ற தாக்குதல்களில் மற்றும் மூன்று கம்பல்கள் தாக்கப்பட்டன. மணிலாத் துறைமுகத்தில் ஒரு சஞ்சாரி மூழ்கடிக்கப்பட்டது. மற்றொன்று பழுதாக்கப்பட்டது. மூன்றாவது கேவிட்டிக்கருகில் தாக்கப்பட்டது. 90 விமானங்கள் அழிக்கப்பட்டன.

வி வி வி வி வி

**இறுதி எச்சரிக்கை.** இந்த வார யுத்தக் குறிப்பை எச்சரிக்கையுடன் முடிப்போம். நாம் கடைசி கட்டத்தை அடைந்து விட்டோம். ஆகிலும் போர் ஜயித்தபாடில்லை. சென்ற சனிக்கிழமையன்று மிஸ்டர் சர்ச்சில் காமன்ஸ் சபையில் பின்வருமாறு பேசினார்.

"இப்பொழுது போரின் நெருக்கடியான நிலைமை வந்துவிட்டது. எல்லா போர் முனைகளிலும் மகத்தான கோரமான போர்களை நடத்தவேண்டியிருக்கும்.

"நாம் கடைசி கட்டத்திலிருக்கிறோமென்று நினைக்கிறேன். ஆகிலும் இந்தப் பந்தயத்தில் முடிவு ஏற்படும் வரையில் பூராவான முயற்சிகளை எடுத்துக் கொள்ளாவிட்டால் முடிவு அநேக காலம் வரையில் நீடித்துவிடும். இவ்வளவு காலம் பரிசிரமப்பட்டவர்கள் சகிக்க முடியாத கஷ்டங்களை அனுபவிக்க வேண்டிவரும்.

**எதிரியின் நம்பிக்கை.** "எதிரி இரண்டு அம்சங்களை நம்பியிருக்கிறான். யுத்தத்தை நீடிப்பதன் மூலம் நம்முடைய ஊக்கத்தை நாசம் செய்து விடலாமென்று அவன் நினைக்கிறான். இதைவிட முக்கியமாக பலமாகத் தாக்கி வரும் மூன்று வல்லரசுகளிடையே பிளவு ஏற்படு மென்று நினைக்கிறேன்.

"வேறுபாடான சந்நிவேசங்களை உடைய பிரிடன், அமெரிக்கா, ருஷ்யா போன்ற மூன்று வல்லரசுக்குள் அவர்கள் கைப்பற்றவிருக்கும் பல்வேறு நாடுகளை நடத்தும் முறையில் அவர்களுக்குள் அபிப்பிராய பேதங்கள் இல்லாமலிருக்கமுடியாது.

"ஆகிலும் நமக்குள்ள ஒற்றுமை பலமாகவும் உறுதியாகவும் இருக்கிறது. இந்த அமைப்பு தானாக நிலைபெறாது. அதை மிகவும் ஜாக்கிரதையுடனும் கவனத்துடனும் பரி பாலித்து வரவேண்டும்.

"மூன்று வல்லரசுகளும் ஒரு இடத்தில் கூடிப் பேசுவதற்கு தூரமும், சந்தர்ப்பமும் நபர்களும் இடையூறாக இருக்கின்றனவென்று நான் இச்சபை முன் அடிக்கடி சொல்லி யிருக்கிறேன். அலைந்து திரிகிறவர்கள். ஆகையால் நான் ஒவ்வொரு இடத்திற்கும் சென்று ஏற்பாடுகளைச் செய்து வருகிறேன்". ———

# எதிர்த்துப் போராடும்படி ஹிட்லரின் வேண்டுகோள்.

## தோல்வி ஒப்புக்கொள்ளப்படுகிறது.

(மான்செஸ்டர் கார்டியன்).

ஜெர்மன் மக்களுக்கு ஹிட்லர் செய்திருக்கும் பிரகடனத்தைப் பார்த்தால் யுத்தத்தைப் பற்றி நாஸி அரசாங்கத்தின் அபிப்பிராயம் மாறுதலடைந்துவிட்டதென்று புலப்படுகிறது.

ஜெர்மனியில் உத்தியோக முறையில் வெளிவந்த அறிக்கையில் முதல் முதலாக இப் பொழுதுதான் வெற்றி கிடைக்குமென்ற பேச்சு காணப்படவில்லை. அதற்குப் பதிலாக தோல்வி ஏற்பட்டதென்ற உணர்ச்சி அதில் த்வனிக்கிறது. ஜெர்மனியினுடையவும், அதன் நண்பர்களுடையவும், ஐரோப்பாவினுடையவும், எதிர்கால க்ஷேமத்தை உத்தரவாதம் செய்யக் கூடிய சமாதானம் ஏற்படும் வரையில் ஜெர்மன் பூமியில் எதிரிகள் காலடிவைக்காமல் நாம் வெற்றிகரமாக எதிர்த்துப் போராடவேண்டுமென்று ஹிட்லர் சொன்னான். இந்தப் பேச்சுக்கு ஒரே ஒரு வியாக்கியானம்தான் உண்டு. இனிமேல் யுத்தத்தில் வெற்றிபெற முடி யாதென்று அறிந்துகொண்ட ஜெர்மன் நிர்வாகம் சமாதானம் செய்து கொள்ளத் தயாராக இருக்கிறது. இதுவரையில் எந்த நாஸித்தலைவரும் இவ்விதமாகப்பேசியிருக்கவில்லை. மேற்கு ஜெர்மனியில் சமீப காலத்தில் கோயபல்ஸ் பேசிய பொழுது சமீபத்தில் ஜெர்மனிபேரில் படை யெடுப்பு ஏற்படுமென்று அவன் எச்சரிக்கை செய்ததுடன் நமக்கு வெற்றி நிச்சயம் என்று கூறி சொற்பொழிவை முடிவு செய்தான். டால் ஷ்வார் கிகோர் என்ற பத்திரிகையில் சமீ பத்தில் வெளிவந்த கட்டுரையில் நேசதேச ஆக்கிரமணம் ஏற்படக்கூடுமென்று ஹிம்லர் மதித்திருக்கிறான். ஆகிலும் ஜெர்மனி வெற்றிபெறுவதற்கு சாதகமளிக்கக்கூடியவரையில், ஜெர்மானியர்கள் எதிர்த்துப் போராடுவார்களென்ற நம்பிக்கையிருக்கிற தென்றும், சொல்லப் பட்டிருக்கிறது. ஜெனரல்கள் கலகம் செய்த பின் ஹிட்லர் பேசிய பொழுது நிலைமை எவ் விதமிருப்பினும், அவனுக்கு அளவு கடந்த நம்பிக்கை இருக்கிறதென்றும், யுத்த முடிவில் ஜெர்மனிக்கு வெற்றி நிச்சயமென்றும் அவன் சொன்னான். இப்பொழுது வெற்றியைப்பற்றிப் பேச்சில்லை. அதற்கு பதிலாக சமாதானம் என்ற பேச்சு தோன்றிவிட்டது. புதிய ஆயு தங்களை உபயோகப்படுத்தும் வரையில் காலஹரணம் செய்வதென்ற பேச்சும் மறைந்தது. ஜெர்மனியின் எதிர்கால க்ஷேமம் உத்தரவாதம் செய்யப்படும் வரையில் நேசதேசத்தார்கள் ஜெர்மனிக்குள் நுழையாதபடி தடுத்துவிடவேண்டும். இது தோல்வியை ஒப்புக்கொள்ளு வதாகும்.

ஆகிலும் ஹிட்லரின் பிரகடனத்திலும், அதே சமயத்தில் ஒலிபரப்பப்பட்ட ஹிம்லரின் சொற்பொழிவிலும், பலஹீனச் சின்னங்கள் காணப்படவில்லை. ஜெர்மானியர்கள் மிகவும் உறுதியுடன் போர்புரியவேண்டுமென்று வேண்டப்பட்டிருக்கிறது. ஆயுதம் தாங்கிச் செல்லக்கூடிய 16 வயது முதல் 60 வயது வரையிலுள்ள ஒவ்வொரு ஜெர்மானியரும் ஜெர் மனியின் புதிய சேனையில் சேர்ந்து கொள்ளவேண்டுமாம். அவர்களில் நொண்டி, முடம் எல்லோரும் சேர்ந்திருக்கிறார்கள். இந்தப்படை பிரெஞ்சு உள்நாட்டுப்படைக்கும், பிரிடிஷ் உள்நாட்டு ரக்ஷகப்படைக்கும் வேறுபட்டது. இந்தப் படைக்கு ஹிம்லரும், டோர்மானும் தலைமை வகிப்பார்கள். மாகாண நிர்வாகிகள் படையைத் திரட்டுவார்கள். நாஸிக்கக்ஷிப் படைகளை ரக்ஷித்துவருவார்கள். இதன் மூலம் ஜெர்மன் மக்கள் பேரிலுள்ள நாஸிகளின் பிடிப்பு பலப்படும். 80 மிலியன் ஜனங்கள் அழிக்கப்படும் நிலைமைக்குத் தூண்டப்படும் காக்ஷி நம்முன் நிற்கிறது.

# ஜெர்மனியின் அந்தியகாலம் சமீபித்துவிட்டது.

## ஹிம்லரின் வீணான ஆசை.

### (டைம்ஸ் பத்திரிகை).

ஜெர்மன் உள்நாட்டுப் போர்முனையின் தலைவராக ஹிம்லர் நியமிக்கப்பட்டபின் அவனுக்குப் பழக்கமில்லாத பொது ஜனங்களிடையே பிரசங்கம் செய்வது என்ற பொறுப்பு அவனுக்கு ஏற்பட்டுவிட்டது. இதுவரையில் அவன் கொடுமை நடவடிக்கைகளைத் தூண்டிவந்தானேயொழிய ஜனங்களை நயவஞ்சகமாகப் பேசி வசப்படுத்தும் முறைகளில் அவன் ஈடுபடவில்லை.

கிழக்குப் பிரஷ்யாவில் அவன் ஆற்றிய சொற்பொழிவில் உபயோகமற்ற நம்பிக்கைகொள்ள வேண்டுமென்று தூண்டப்பட்டது. ருஷ்ய முன்னேற்றத்தை வாலிபர்களும், விருத்தர்களும், தடுக்க முன்வரவேண்டுமென்ற வேண்டுகோளும் செய்யப்பட்டது. பிரசங்கத்திற்கு ஆஜராகயிருந்தவர்களிடம் உசிதமற்ற சரித்திர பூர்வமான உதாரணங்களையும் அவன் கூறினான். 1813-ம் வருஷத்தில் லீப்சிக்கில் நடைபெற்ற மகத்தான போரைப்பற்றிப் பேசினான். அவனுடைய சபையோர்கள் அறிவீனர்களென்று அவன் நினைத்தான்போலும். அந்தப் போரில் மேற்குமுனையான தீபகற்பத்திலும், கிழக்குப் போர்முனையான ருஷ்யாவிலும், பலமாகத் தோல்வியுற்ற பிரான்ஸ் ஐரோப்பாவின் பூராபலத்தையும் எதிர்த்துத் தன்னந்தனியே நின்றதென்பதையும், பிரான்ஸை முறியடித்த தேசங்களின் சமஷ்டியில் பிரஷ்யா ஒன்றென்பதையும், வெற்றிக்கு ருஷ்யப்படைகள் காரணமென்பதையும் அவன் மறந்துவிட்டான்போலும்.

ஜெர்மனியின் தற்போதிய நிலைமையை அப்பொழுதிருந்த பிரான்ஸுக்கு ஒப்பிடலாம். ஒரு வித்யாசம் இருக்கிறது. இப்பொழுது நெபோலியன் இல்லை. ஜெர்மனியின் அந்தியகாலம் கிட்டிவிட்டது. ஜெர்மனி ஒன்றன்பின் ஒன்றாக போர்களைத் துவக்கியதற்கும், அவைகளின் இகழ்ச்சிகளுக்கும், ஆதாரமற்ற சாக்குப்போக்குகளையும், காரணங்களையும் வெளியிட்டான். ஹிம்லரின் சொற்பொழிவுக்குச் செவிசாய்த்து அதை மதித்தவர்களுக்கு ஆறுதலளிக்கக்கூடியது யாதெனில், நேசதேசத்தார்கள் இந்த யுத்தத்தில் வெற்றிபெற வேண்டுமானால் அதை அவர்கள் மாரிகாலத்துக்குள் சாதித்துக்கொள்ளவேண்டுமென்று ஹிம்லர் வற்புறுத்தினான். ஜெர்மனி அநேக புதிய ரகசிய ஆயுதங்களை மாரிகாலத்தில் உற்பத்திசெய்துவிடுமென்றும் அவன் குறிப்பித்தான். இது அபத்தப் பேச்சென்று அறியாத எவரும் ஜெர்மனியில் கிடையாது.

ஐரோப்பாவில் அஸ்திவார ஆட்டம் கண்டிருக்கும் நாகரீக வாழ்க்கையில் அதிக கவலைகொண்ட நேசதேசத்தார்கள் மனிதவர்க்கம் ஆறுவது மாரிகால யுத்தத்தின் சிரமங்களை அனுபவிக்கக்கூடாதென்று நினைக்கிறார்கள். யுத்தத்தின் முடிவு சற்று தாமதப்பட்டாலும் வெற்றி நமக்கு நிச்சயமென்பதில் சந்தேகமில்லை. அடுத்த வஸந்தகாலத்தில் நமது படை பலம் ஜெர்மனியுடையதைவிடப் பன்மடங்கு அதிகரித்துவிடும். ஜெர்மனி எப்பொழுது முறியடிக்கப்படுமென்பது ஊகிக்கக்கூடியதாகயிருந்தாலும், அது பூர்ணமாக தோற்கடிக்கப்படுமென்பதில் ஐயமில்லை.

---

# வார்ஸாவுக்குமுன் ருஷ்யாவின் அயர்வு.

## ராணுவ தந்திரம் காரணம்.

### (லெப்டினென்ட் ஜெனரல் ஸர் டக்ளஸ் ப்ரௌன்ரிக்.)

படைகளை நிலைபெறச் செய்வதற்கு நேர்முகமாகத் தாக்குவதைவிட இதர உபாயங்களும் இருக்கின்றன.

விலாப்பக்கத்திற்கு அபாயம் நேரிடுவதைக்கண்டு சோல்ஜர்கள் எப்பொழுதும் பீதியடைவார்கள். அவ்விதமான அபாயம் நேரிடும்போலிருந்தால் படைகள் முன்னேறுவதை நிறுத்திவிடுவது சகஜம்தான்.

ருஷ்யப்படைகள் வார்ஸாவுக்குமுன் இரண்டரை மாதமாக தாமதம் செய்ததற்குத் தகுந்த காரணங்களிருப்பதால், அவைகளைப் பரிசீலனை செய்வது நலமாகும்.

ஜூலைமாதத்தில் செம்படை 600 மைல் அளவுக்குப் போரைத் துவக்கி 250 மைல்கள் வரையில் முன்னேறிற்று. இந்தத் தாக்குதலின் மத்தியபாகம் வார்ஸாவின் வெளிப்புறத்துக்கு நேராக வந்துவிட்டது. பெர்லினிலிருந்து நேர் கிழக்கில் 300 மைலுக்குள்ளும் படைகள் வந்துவிட்டன. கால சௌகரியத்துடன் படைகள் முன்னேறும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இன்னும் அந்தப்படை வார்ஸாவுக்கு முன் தயங்கி நிற்கின்றது. சர்பராக்களைக்கொண்டுவரும் சிரமம் ஏற்பட்டிருக்கிறதென்று சிலர் சொல்லலாம். சூன்யமான ஒரு பிரதேசத்தில் ருஷ்யப்படை ஒரு மாதத்தில் முன்னேறியதால் சர்பரா ப்ரச்னை ஒருவாறு நடவடிக்கையை பாதித்திருக்கக்கூடும். அதன் உண்மையான காரணம் வேறு இடத்திலிருக்கிறது. இது யுத்ததந்திரமேயொழிய நிர்வாக முறையல்ல.

கிழக்கு பிரஷ்யாவிலும், லிதுவேனியாவிலும், லாட்வியாவிலும், எஸ்தோனியாவிலும் ஜெர்மனி ஏராளமான படைகளைக் குவித்து வைத்திருந்தது. அவைகளுக்குப் பின்னால் கோனிக்ஸ்பர்க், ரீகா, டாலின் முதலிய துறைமுகங்களிலிருந்து கடல் மார்க்கங்களும் பத்திரமாக இருந்தன. வார்ஸாவுக்கு மேற்கில் ருஷ்யப்படைகள் முன்னேறினால் அவைகளுக்கு ஜெர்மன் படைகள் ஆபத்து உண்டுபண்ணிவிடும். வலது பார்ச்வத்திலுள்ள அபாயம் நீங்கினாலொழிய, மத்தியில் முன்னேறும் அபாயத்தை மேற்கொள்ள ருஷ்யா தயாராக இல்லை.

ஆகையால் வார்ஸாப்பகுதியிலுள்ள படைகளும், விஸ்டுலா நதிக்கரையிலுள்ள படைகளும் தங்களுடைய லாபங்களை ஒன்றுபடுத்தவேண்டுமென்றும், முன்னேறும் வாசல்களைப் பலப்படுத்தவேண்டுமென்றும், அதற்கு வடக்கிலுள்ள படைகள் பால்டிக் நாடுகளைத் தாக்க திருத்தியமைத்துக்கொள்ளவேண்டுமென்றும் உத்திரவிடப்பட்டார்கள். வடக்குப்பக்கத்தில் முன்னேற்றம் வெற்றிகரமாக முடிந்துவிட்டது. அடுத்தபடியாக கிழக்கு பிரஷ்யா சுத்தி செய்யப்படும். அதன்பின் மேற்கு நோக்கி மகத்தான தாக்குதல் ஆரம்பிக்க வழி ஏற்படும்.

ஒரு மாதத்திற்குள் ருஷ்யாவுக்குக் கிடைத்த அபாரமான வெற்றிகளைக் கவனிக்கும்பொழுது, ருஷ்யர்கள் தங்களுடைய வலது பார்ச்வத்தைப்பற்றி அனாவசியமாகக் கவலைகொண்டார்கள் என்று நினைத்துவிடலாம். ஹிட்லரின் செல்வாக்கு உச்சநிலையிலிருந்தபொழுதும் ரக்ஷணையற்ற அவனுடைய பார்ச்வங்களைப்பற்றி ஹிட்லர் கவலைப்பட்டுக்கொண்டிருந்தான் என்பதை நீங்கள் ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். பிரிடனைப் படையெடுக்கும் முயற்சி வீணாகப் போனபின் அவன் தன்னுடைய கவனத்தை கிழக்குப் பக்கமாகத்திருப்பி பால்கன் நாடுகள், துருக்கி, பாரசீகம், இந்தியா முதலிய நாடுகளைக் கவர்ந்துவிட எண்ணினான். ஆகிலும் இடது பக்கத்தில் ஸ்னேகபாவமுள்ள ஆனால் வலுமிகுந்த ருஷ்யா இருப்பதைக்கண்டு அவன் அஞ்சினான். ஆகையால் 1941-ம் வருஷம் ஜூன் மாதத்தில் இடது பார்ச்வத்தை சுத்தி செய்வதற்காக அவன் வஞ்சனை புத்தியுடன் ருஷ்யாவைத் தாக்கினான். அவனுடைய எண்ணம் நிறைவேறவில்லை. ஆனால் இப்பொழுது ருஷ்யர்கள் பால்டிக் கடற்கரையில் வெற்றிபெற்று வருகிறார்கள்.

ஆரம்ப காலத்தில் ஹிட்லருக்கு ஏற்பட்ட இரண்டு தோல்விகளுக்கு எந்த சமயத்தில் பின்வாங்குவதென்பதை ஹிட்லர் அறியாததுதான் காரணம். எல்அலாமீனில் ரோமல் வெகுகாலம் தங்கியிருந்தான். இதே விதமாக ஸ்டாலின்கிராடில் பாலஸும் தாமதித்துவிட்டான். ஜெர்மனியின் எல்லைச்சரக ஓரமாக ஹாலந்தின் ஒரு தற்காப்பு அரணை அமைப்பதற்கு காலஹரணம் வெற்றிகரமாகச் செய்துவிட்டானென்றால், இறுதிவரையில் கடற்கரைப்படைகள் துறைமுகங்களை தற்காப்பு செய்து வந்ததுதான் அதற்குக் காரணமாகும். கதே விதமாக பால்டிக் நாடுகளிலுள்ள துருப்புகளை ஏராளமாகக் காவு கொடுத்துத்தான். ஹிட்லர் ருஷ்யர்களைத் தேக்கி வைத்திருக்கிறான்.

இந்த தியாகங்களிலிருந்து ஜெர்மனிக்கு ஏதாவது பலனேற்படுமாவென்பது காலக்கிரமத்தில் தான் தெரியவரும். ஸ்டாலின்கிராட்டிலும், டுனிஸியாவிலும் ஹிட்லருக்கு ஏற்பட்ட தோல்விகளுக்கு, அவனுக்குத் தடங்கல் ஏற்பட்டுவிட்டதை ஹிட்லர் ஒப்புக் கொள்ள பயந்ததுதான் காரணமென்பதை ஒருவரும் மறுக்கமுடியாது. எந்நிலைமையிலும் கடற்கரைப்படைகளை இழந்தபின் ஸீக்பிரட் அரணைக் காப்பாற்றக்கூடியப் பயிற்சிபெற்ற படைகள் ஹிட்லரிடம் குறைவுபட்டுவிட்டன. அநேக இடங்களிலுள்ள படைகளில் 600, 700 பேர்கள் தானிருக்கிறார்கள். 7-வது, 15-வது படைகளில் எஞ்சியவர்களும், புதிதாகச் சேர்க்கப்பட்டு சொற்பப் பயிற்சிபெற்ற விருத்தர்களும், சிறுவர்களும் அதில் சேர்ந்திருக்கிறார்கள். ஹிம்லர் அவர்களைத் திரட்டி S. S. படைகளையும், ஹிட்லர் வாலிபர்களையும் கொண்டுத் தயாரித்திருக்கிறான். 'அவர்கள் முரட்டுத்தனமாக எதிர்த்துப் போராடலாம். ஆனால் அவர்களிடம் பதில் தாக்குதல் செய்யும் சக்தி கிடையாது. அவர்கள் பின்வாங்கும்பொழுது சின்ன பின்னமாகி விடுவார்கள்.

---

# மாஸ்கோ சம்பாஷணை.

## பிரிடிஷ் பத்திரிகைகளின் வியாக்கியானம்.

### 1. டைம்ஸ் பத்திரிகை.

நேசதேச ராஜதந்திரிகளின் பத்து நாளைய இடைவிடாத சம்பாஷணையில் உபயோகமுள்ள அநேக முடிவுகள் செய்யப்பட்டிருக்கவேண்டும். யுத்த தந்திரத்தில் ஒத்துழைப்பும், கொள்கைளில் ஒன்றுபட்ட அபிப்பிராயத்திலும், நடை முறையில் ஏற்படக்கூடிய சிரமங்களைத் தீர்ப்பதிலும், அவர்களுக்குள் தாராளமான அபிப்பிராய பேத அறிவிப்பு ஏற்பட்டது. இவ்விதமான விஷயங்களின் மூலம் இந்த விளைவுதான் ஏற்படும் என்பது மிஸ்டர் சர்ச்சிலின் தீர்மான கொள்கை. அவ்விதமாகவே நடைபெற்றிருக்கின்றன. இரண்டாவது க்யூபெக் மஹாநாட்டிலிருந்து திரும்பிவந்த உடன் காலத்திலேயே மாரிகாலத்தில் சிரமசாத்தியமான

பிரயாணத்தை அவர் மனதார மேற்கொண்டதற்கு தேசம் பூராவும் அவருக்கு நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறது.

பரஸ்பர நல்லுணர்ச்சிக்குச் சந்தர்ப்பம்.
2. டெயிலி டெலிகிராப்.

எவ்வகைப்பட்ட பொதுப்படையான ராஜீய பிரச்னைகள் சம்பந்தமாக சர்ச்சை நடந்தது என்று ஜோசியம் சொல்லுவது எளிதாகிலும், அது லாபகரமானதல்ல என்று டெயிலி டெலிகிராப் பத்திரிகையில் எழுதப்பட்டிருக்கிறது. அநேக விஷயங்கள் விவாதிக்கப்படவேண்டியிருந்தன. பத்து நாட்களில் அவைகள் விமர்சனம் செய்யப்பட்டு பிரிடிஷ், ருஷ்யத் தலைவர்கள் ஒருவர் மற்ருெருவருடைய அபிப்பிராயங்களை நன்ருய் அறிந்து கொண்டார் என்றுதான் சொல்லவேண்டும்.

நம்பிக்கைக்கு இடம்.
3. நியூஸ் கிரானிகிள்.

ஒரு பிரகடனத்திலிருந்து எல்லா முறைகளிலும் மாஸ்கோ சம்பாஷணைகள் திருப்திகரமாக முடிவு பெற்றன என்று சொல்லவேண்டும் என்று நியூஸ்க்ரானிகிள் பத்திரிகை எழுதுகிறது. பிரசுரத்தின் வாசகங்கள் உற்சாகத்தையும், நம்பிக்கையையும் ஊட்டுகின்றன. சம்பாஷணைகள் சிநேக பாவத்துடனும் ஒத்துழைக்கும் மனப்பான்மையுடனும் நடைபெற்றன என்பது ருசுவாகிறது. இந்த உத்சாகமான செய்தி நேசதேசத்தார்களின் ஒவ்வொருவருடைய மனதிலும் ஊக்கமளிக்கக்கூடும்.

---

## நேசதேச இரண்டு வருஷ வெற்றிகள்.

(டைம்ஸ் பத்திரிகை).

இரண்டு வருஷங்களுக்கு முன்பு நேசதேச எட்டாம் சேனை வட ஆபிரிக்காவில் அச்சு நாட்டினருடன் எதிர்த் தாக்குதல்கள் செய்தனர்.

அக்டோபர் 23-ம் தேதி ஆரம்பித்து 12 நாட்கள் நடந்த எல் அலாமீன் யுத்தம் இந்த் யுத்தத்தின் போக்கை மாற்றியதாகும். இதனை யுத்தப் போக்கை மாற்றியதென்றே நாம் கூறலாம். இந்த மாதத்தில் ஏற்பட்ட தோல்விதான் முதன்முதல், ஐரோப்பாவிலோ அல்லது ஆபிரிக்காவிலோ அச்சுக் கட்சியினர் அடைந்த முதல், முழுத்தோல்வியே இந்த யுத்தத்தில் நேசக் கட்சிக்கு ஏற்பட்ட வெற்றியே, ஆபிரிக்காவிலும், ருஷ்யாவிலும், மேற்கு ஐரோப்பாவிலும், பால்டிக்கிலும், தென்கிழக்கு ஐரோப்பாவிலும் நேசக்கட்சிக்கு தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிகளுக்கு வழிகாண்பித்ததாகும்.

அக்டோபர் மாதம் 23-ம் தேதி எட்டாம் சேனையிலிருந்த பழைய நண்பர்கள்முன் பீல்ட் மார்ஷல் மாண்ட் காமரி பிரசங்கித்தார். அதில், எல் அலாமீனில் போரிட்டவர்கள் உலகத்தில் பல இடங்களில் உள்ள சேனைகளில் பிரிக்கப்பட்டுவிடப்பட்டிருக்கின்றனர் என்று குறிப்பிட்டார். தன்னுடன் மேற்கில் பலரும், தன்கீழ் வேலைபார்த்த பல லெப்டினெண்டுகள் கீழ் எட்டாம் சேனையிலே பலரும், பலர் ஜப்பானியர்களுடன் போரிட கிழக்கில், இந்தியாவிலோ, அல்லது ஆஸ்திரேலியாவிலோ, இந்தியாவிற்கும் லிபியாவிற்குமுள்ள தூரம்போன்ற தூரமுடைய பிரதேசங்களில் உள்ள தளங்களிலும் இருப்பதாகவும் குறிப்பிடுகிருர். அவர்கள் எங்கெங்கு இருந்தாலும் அவர்களுக்கு அங்கங்கு பெரும் வேலைகளும் தியாகங்களும் உள. பல விஷயங்களில், சின்னுட்களுக்கு முன் ஏற்பட்டுள்ள ருஷ்ய உணர்ச்சி மிகும் முன்னேற்றம், பிரான்ஸின் விடுதலை, மத்திய பசிபிக்கில் ஜப்பானை எதிர்த்த அமெரிக்க முன்னேற்றம், பிலிப்பைன்ஸ் மேல் தாக்குதல்கள் போன்ற இம்முன்னேற்றங்கள் மிகவும் துரிதமாய் நடந்திருக்கின்றன. இருப்பினும், சுலபமானதும் எதிரிகளின் எதிர்ப்புகள் குலைவதுமான அரங்கங்கள் இன்னும் ஏற்படவில்லை என்றுதான் சொல்லவேண்டும்.

ஆனுல் யுத்தத்தின் இறுதி பாகம் மிகவும் கஷ்டமாய்தான் இருக்குமென்று தோன்றுகிறது. அத்துடன் தேவைகளும் எல் அலாமீனில் இருந்ததைவிட அதிகமாய்த்தான் இருக்கும். அக்கால வெற்றியென்ருல் யுத்தத்தில் நம் ஜயத்தைக் குறிக்கும் நாள். ஆனுல் தற்போதைய வெற்றி என்ருல் யுத்தத்தின் வெற்றியான முடிவை நெருங்கச் செய்யும் நாள். எல் அலாமீன் உணர்ச்சி இப்பொழுது இருக்கவேண்டும். ஆனுல் வெற்றியால் ஏற்படும் லாபமும், கீர்த்தியும், அதிகமாய்த்தான் இருக்கும்.

---

## ஜெர்மானியர்களை நேசதேசத்தார்கள் நடத்தும் முறை.

### சிக்ஷைகள் கடுமையானவை, ஆனுல் அடக்குமுறையில்லை.

(டெயிலி ஹெரால்ட்.)

நாங்கள் பழிவாங்குவதாக உத்தேசிக்கவில்லை. ஆனுல் ஜெர்மனி மற்ருெரு மூன்ருவது யுத்தத்தைத் துவக்க வசதிபெறும் வகையில் அதை நாம் நடத்தக்கூடாதென்பது தான் இவ் வருஷத்திய முக்கியமான பிரச்னையென்று ஸர் வால்டர் கிட்ரின் சொன்னுர்.

அந்தப் பிரச்னை பின்வருமாறு :—சென்ற ஐந்து வருடங்களாக நிகழ்ந்த அழிவுகளுக்கு ஜெர்மானியர்கள் பொருப்பாளியல்லவென்று சொல்லுவதா? நாஸி நிர்வாகத்தில் ஸ்தானம் வகித்தவர்கள் பேரில் குற்றம் சாட்டி இரத்த வெள்ளத்துக்கும், கொடுந்துன்பத்துக்கும், அக்கிரமங்களுக்கும் அவர்கள் தான் ஜவாப்தாரிகள் என்று சொல்லுவதா? அமெரிக்க சபையின் பெரும்பான்மையோர் அந்த அபிப்பிராயத்தை நிராகரித்து விட்டார்கள். ஜெர்மனியில் ஜனநாயகம் புத்துயிர் பெறவேண்டுமானால், ஜனநாயக முறையைக் கடைப்பிடிக்காததற்காக ஜெர்மானியர்கள் பேரில் அனுதாபம் காட்டுவதனால் இந்த நம்பிக்கை அதிகப்படாது.

விஞ்ஞான, கலை முன்னேற்றத்திற்கு அரியசேவை செய்தபின் அது மானிடவர்க்கத்துக்கு ஒரு சௌகரியத்தையும் செய்யவில்லையென்பதை ஜெர்மனி உணரும்படி நாம் செய்ய வேண்டும். அது ரசாயன ஆராய்ச்சி வேலையில் நிபுணனாக இருக்கிறது. சங்கீதத்திலும், கவிகளை இயற்றுவதிலும் அது பிராபல்யமடைந்திருந்தது. அது தடங்கல்களைக் கண்டு பயந்து விட்டது. ஜெர்மன் விஞ்ஞான சாஸ்திரிகள், கவிபாடகர்களின் சாதூர்யம் நாகரிகத்துக்கு பேருதவி செய்திருக்கிறது. ஆனால் ஜெர்மனியிலுள்ள ஜனநாயகக் கக்ஷியினர்கள் தேசத்தின் ஞானாசிரியர்களின் அளவிற்கு முற்போக்கடையவில்லை. பொதுஜன அபிப்பிராயத்தில் ராஜீய சாமர்த்தியமும், தீர்மானமும் ஏற்படவில்லை. அற்பர்களான துணிவுள்ளவர்கள் அத்தேசத்தின் மேதாவித்தன்மையை புறக்கணித்துவிட்டு அந்தத் திறமையை அகம்பாவம், ஏமாற்றம், கொடுங்கோன்மை பொருந்திய தேசீயம் என்ற துறைகளில் ஈடுபடுத்திவிட்டார்கள்.

ஜெர்மன் மேதாவிகளின் அரிய செய்கைகளை ஐந்து வருடங்களாக ஜெர்மனியிலுள்ள ஜனநாயகக் கக்ஷிதான் பரிபாலித்து வந்துள்ளது. ஜெர்மனியின் கலை ஞானத்தையும், விஞ்ஞான சாஸ்திரத்தையும் காப்பாற்றத்தான் நாம் போர் தொடுத்தோம். ஜெர்மன் மக்கள் யுத்தகீதமியற்றிய வரை பீதோவனுக்கு சமானமானவென்றும் வெடி குண்டு உற்பத்தி செய்கிறவனை விஞ்ஞான சாஸ்திரியின் கூட்டாளி என்றும் மதித்து விட்டார்கள்.

ஆகையால் ஜெர்மன் மக்களுக்கு சிக்ஷை விதிக்கப்படவேண்டும். அவ்விதம் விதிப்பதில் ஜெர்மன் மக்களுக்கும், ஜெர்மன் தலைவர்களுக்கும் வித்தியாசம் பாராட்டப்படவேண்டும். சிக்ஷை கடுமையாகவுமிருக்க வேண்டும். குற்றங்களை ஒப்புக்கொள்ளாமல் ஜெர்மனி தப்பித்து விடலாமென்று நினைத்துவிடக்கூடாது. ஹிட்லருக்கும், அவனுடைய மூதாதிரியர்களுக்கும், சந்ததியார்களுக்கும் அனுகூலமான ஜாதி இளப்பமானது நேசதேசத்தார்களின் அடக்கு முறை மூலமாக பலப்படக்கூடாது.

---

## சமுத்திரத்தில் ஸப்ளைக்கு உபயோகப்படும் பெரிய கப்பற்கூட்டம்.

### படகுகளின் எதிர்ப்பு முறைகளில் வெற்றி.

(டெயிலி எக்ஸ்பிரஸ்).

167 வியாபாரக் கப்பல்களைக்கொண்ட கப்பற்கூட்டம் ஒன்று ஒரு கப்பல் நஷ்டமும் இன்றி பிரிடிஷ் துறைமுகங்களில் வந்து இறங்கின. இதுகாரும் இவ்வளவு பெரிய கப்பற்கூட்டம் உபயோகப்படுத்தப்பட்டதே இல்லை. இப்பெரிய கப்பற்கூட்டம் கடலில் 26 சதுர மைல்களில் பிரயாணம் செய்து 17 நாட்களில் சேரவேண்டிய இடங்களைச் சேர்ந்தன.

அவைகள் யாதொரு கஷ்டமின்றி நடந்தது ஒரு பெருமை என்று தான் சொல்ல வேண்டும். ஏனெனில் பலபுறங்களிலிருந்தும் யூ படகுகளின் தாக்குதல் கடலில் இருந்தன. அவைகளில் பெரும்பான்மையான வேலைகளும், தாக்குதல்களும் பயனற்றுப்போய்விட்டது. அவைகளின் முயற்சியும் ஒன்றுபட்டதுதான். இருந்தும் பயனில்லை.

எதிரிகளின் யூ படகு தளங்களான பிரஸ்ட், லோரியண்ட், ஸெயின்ட் நாஸேர், முதலிய தளங்களை நாசப்படுத்தியதானது, இந்த பெரும் கப்பற்கூட்டத்தை வெற்றியுடன்கொண்டு வந்ததற்கு மிகவும் சாதகமாகத்தான் இருந்திருக்கிறது. ஆனால் நாம் முழுதும் நசுக்கிவிடவில்லை. மிஸ்டர் அலெக்ஸாண்டர் இம்மாதிரியாக அதிகமான நம்பிக்கையை எச்சரிக்கிறார். இன்னும் பழைய இடங்களில் யூ படகுகள் இருக்கத்தான் இருக்கின்றன. மிஸ்டர் சர்ச்சிலும், மிஸ்டர் ரூஸ்வெல்ட்டும் அவர்களின் ஒன்றுபட்ட வாக்குமூலத்தில் ஸப்மரீன் யுத்தம்பற்றி ஸெப்டம்பர் மாதம் கூறும்போது, எதிரிகள் புதுவிதமான யூ படகுகளுடன் இந்த வேனீர் காலத்தில் தாக்குதல் செய்யலாம் என்று சொன்னார். இன்னும் கவனமும் கடற்தளங்களில் பயமின்றி உலவ அவைகளை வேட்டையாடுதலும் நின்றுவிடவில்லை. எனவே பத்தாயிரம் டன்கள் நிறையுள்ள இச்சாமான்களை கொணர்ந்ததில் யாதொருவிதமான சுலபமும் இல்லை.

# கடலில் வின்ஸ்டன் துறைமுக அமைப்பு.

## நார்மண்டி படையெடுப்பின் பூரா விவரங்கள்.

(*A. J. மாக்வின்னி.*)

பிரிடனில் முன்னதாகவே தயாரிக்கப்பட்டு நார்மண்டி கடற்கரைகளில் ஒன்று சேர்க்கப் பட்ட துறைமுகங்களைப் பற்றிய தகவல்கள் பகிரங்கப்படுத்தப்பட்டுவிட்டதால், மகத்தான உத்தரங்களையும், காங்கிரீட் அலைதாங்கிகளையும், பிரிடனிலிருந்து பிரான்ஸுக்குக் கொண்டுவந்த ஸ்தாபனத்தின் பெருமையைத்தான் உங்களுக்குச் சொல்லவிரும்புகிறேன்.

வெர்ஸடைல் என்ற பிரிடிஷ் நாசகாரி கப்பல் கூட்டத்தின் தலைமை காரியாலயமாக நிர்மாணிக்கப்பட்டது. அக் கப்பல் கால்வாயைத்தாண்டி நார்மண்டி கடற்கரைக்கருகில் சென்ற பொழுதும் அது மற்ற நடவடிக்கைகளைக் கண்காணிப்புச் செய்தவந்தபொழுதும் நான் அதில் அநேகம் தடவை சென்றிருக்கிறேன்.

நாங்கள் இங்கிலாந்தைவிட்டுப் புறப்படுமுன் கப்பலில் வாலிபமுள்ள கமாண்டர் கப்பல் வேலைக்காரர்களுக்குப் பின்வருமாறு கூறினர். அடுத்த சில நாட்களில் நீங்கள் ஆபூர்வமான காக்ஷிகளைக் காண்பீர்கள். கடலில் அவ்விதமான அற்புதங்களை இதற்குமுன் நீங்கள் கண்ணுற்றிருக்கமாட்டீர்கள். சில சமயங்களில் லண்டன் கோபுரம் போன்ற உருவம் கப்பலின் வலது பக்கத்தை நோக்கி மிதந்து வருவதாயும் கட்டடங்களும், சாமான் கிட்டங்கிகளும் போன்ற உருவங்கள் போன்றவை துறைமுகங்களுக்கு மிதந்து செல்லுவதையும் கண்டு வியப்புக்கொள்ளவேண்டாம். அவைகளின் பிரயோஜனம் உங்களுக்கு வெகு சீக்கிரத்தில் புலப்படும். அதுவரையில் இதை நீங்கள் பரம ரகசியமாக வைத்துக்கொள்ளவேண்டும். கடற்கரையிலிறங்கியபின் நீங்கள் மௌனமாகயிருக்கவேண்டும். நீங்கள் காணக்கூடிய ஆபூர்வ சாமான்களைப்பொருத்துதான் மேற்குமுனைப் போரின் சிலாக்கியம் புலப்படும்.

நாங்கள் கடலில் வெகுதூரம் செல்லுமுன் அடி வானத்தில் அநேக விசித்திரமான சாமான்கள் இழுத்துச் செல்லப்படுவதை நாங்கள் கண்ணுற்றோம். பிரம்மாண்டமான உத்திரங்களும், மகத்தான காங்கிரீட் கோபுரங்களும், பிரான்ஸுக்கு இழுத்துச்செல்லப் பட்டன. அவைகளைப்பற்றி விசித்திரமான அபிப்பிராயங்களை மாலுமிகள் சொல்லத் துணிந்தார்கள். "கால்வாயின் குறுக்கே நாம் பாலத்தை அமைக்கப்போகிறோமென்று அவர்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள். காப்டன் சிரித்துக்கொண்டே இவர்களே திடுக்கிட்டு ஏமாற்றமடைந்தால் ஜெர்மானியர்கள் என்னநினைக்கக்கூடுமென்று சொன்னர்.

பிரெஞ்சு கடற்கரை யோரத்தில் 5 லக்ஷம் டன்கள் மொத்த எடைமானமுள்ள கியாதி பெற்ற கப்பல்களும், சாமான் கப்பல்களும், அலைதாங்கிகளாக இருப்பதற்காக தண்ணீரில் மூழ்கடிக்கப்பட்டன. முக்கியமானவைகள், 32 வருஷமாக இருந்த செஞ்சூரியன் என்ற போர்க் கப்பல், பிரெஞ்சு கப்பலான கோர்பெட், டச்சு சஞ்சாரியான சுமாத்ரா, பழைய பிரிடிஷ் சஞ்சாரியான டர்பான்.

நாசகாரியிலிருந்த காவல் அறையிலிருந்து ஒருவர் ஜெர்மன் ஒலிபரப்பைக் கேட்டார். அப்பொழுது ஒரு ஜெர்மானியர் ஜெர்மன் விமானப்படையையும், ஜெர்மன் கற்காப்புகளும், எதிரியின் ஏராளமான சண்டைக் கப்பல்களையும், சாமான் கப்பல்களையும் மூழ்கடித்துவிட்டன என்று ஒலிபெருக்கினர்.

மூழ்கடிக்கப்பட்ட கப்பல்களின் காற்றுப்படாத பக்கத்தில் சிலபடகுகள் சென்றன. அவைகளில் சிலவைகள் 'D' தினத்தன்று கேப்ஸிலிருந்து நான்கு நாட்கள் வீதம் கடலில் சென்றிருக்கின்றன. மற்றவைகள் வடக்கு பக்கத்திலுள்ள துறைமுகங்களிலிருந்தும் நதிகளிலிருந்தும் வெகுதூரம் சென்று சுற்றி வந்திருக்கின்றன. அவைகளில் சிறந்த படைகள் வந்திருக்கின்றன. அவைகளில் விமான எதிர்ப்பு பீரங்கிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

நாங்கள் மறுபடியும் ஜெர்மன் ஒலிபரப்பைக் கேட்டோம். பின்வருமாறு சொல்லப் பட்டது. "நாம் எதிர் பார்த்தபடி நேசதேசப் படைகள் இறங்கிவிட்டன. ஆனால் இறங்கிய படைகளுக்கு உதவிசெய்ய படைகளையும், சர்பராக்களையும் கொண்டுவர அவர்கள் ஒரு துறைமுகத்தையும் பெறமுடியாது. மணற் பாங்கான கடற்கரைகளில் அவர்கள் துளித் துளியாகத்தான் சர்பராக்களைக் கொண்டு வரக்கூடும். கடற்கரையிலிறங்கியவர்கள் ஜெர்மன் பொறிக்குள் அகப்பட்டு விட்டார்கள்".

சரித்திரத்திலேயே மகத்தான என்ஜினியரிங் திட்டப்படி நேசதேசத்தார்கள் வேலை செய்து வருகிறார்களென்பதையும், முன்னதாகவே கட்டப்பட்ட ஒரு துறைமுகத்தில் 12,000 டன்கள் எடைமானமுள்ள சர்பராக்களையும் 2,500 மோட்டார்களையும், தினசரி இறக்க ஏற்பாடு செய்திருக்கிறார்களென்பதையும் அவர்கள் அறிந்து கொள்ளவில்லை. பிரான்ஸில் படைகளை இறக்கி சமாளித்து நிற்க நிறுவப்பட்ட திட்டத்தின் புள்ளி விபரங்களை

கவனியுங்கள். ஆரம்பத்தில் 24,000 அடிகள் நீளமுள்ள அலைதாங்கிகள் அமைக்கப்பட வேண்டும். 480 அடி நீளமுள்ள பாகங்களாக 13 மைல்கள் வரையில் தூண்களும், ஓடு பாலங்களும் அனுப்பப்பட்டன. 15 லக்ஷம் டன்கள் எடைமானமுள்ள சேர்க்கைத் துறை முகங்களும் மிதக்கும் அலைதாங்கிகளும், எஃகு உத்திரங்களும், பாரவாகிகளும் கால்வாயைத் தாண்டி பருவகால அசௌகரியத்திலும், ஆழமில்லாத இடங்களிலும், சுரங்க வெடி பரவப் பட்ட இடங்களிலும் இ-படகுக் கூட்டங்கள், யூ-படகுகள் மத்தியிலும் பிரான்ஸுக்குக் கொண்டு போகப்பட்டன. துறைமுகங்களிலும், கப்பல் துறைகளிலுமுள்ள 150 இழுப்புப் படகுகள் இந்த மகத்தான வேலையிலீடுபட்டன.

ஐம்பது வருடங்கள் கண்டிராத காற்று அப்பொழுது அடித்தது. அதையும் பொருட் படுத்தாமல் ஆரோமாஞ்சன் கடற்கரையில் சில நாட்களுக்குள்ளாக டோவரை விட மகத் தான ஒரு பெரிய துறைமுகம் அமைக்கப்பட்டுவிட்டது. டோவர் துறைமுகத்தை ஐந்து வருடங்கள் கட்டி அமைத்தோமென்று ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள்.

ஜெர்மன் ரேடியோவில் மறுபடியும் நேசதேசத்தார்களுக்கு சாமான்களை இறக்கும் துறைமுகங்களில்லை என்று ஜெர்மன் மக்களுக்கு உறுதி கூறப்பட்டது. லேஹாவர், செர் பர்க், டிப்பி, கலே போன்ற துறைமுகங்களில்லாமல் அவர்கள் ஒன்றும் செய்ய முடியா தென்றும் அந்தத் துறைமுகங்கள் ஒருபொழுதும் அவர்கள் வசமாகாதென்றும் சொல்லப் பட்டது.

பிரிடனில் முன் கூட்டியே தயாரிக்கப்பட்ட துறைமுகம் அமைக்கப்பட்டிராவிட்டால் கலே, டிப்பி, செர்பர்க், பிரெஸ்ட் முதலிய துறைமுகங்கள் இன்றைக்கும் ஜெர்மன் வசமே இருந்திருக்கும். ஆனால் பிரிடனில் லக்ஷக்கணக்கான தொழில் நிபுணர்களும், ஸ்திரீகளும் அந்த ரகசியத் துறைமுகத்துக்குள்ள உருப்புகளைச் செய்து முடித்தார்கள். இவைகள் எதற்காகவென்று கூட அவர்களுக்குத் தெரியவில்லையாம்.

கடற்படை ஆரோமான்சஸை வின்ஸ்டன் துறைமுகம் என்று அழைத்தது. இந்த திட்டத்தை மிஸ்ட்டர் சர்ச்சில்தான் வெற்றிகரமாக நடத்தினார். பிரெஞ்சு மக்களும் கூடிய சீக்கிரத்தில் ஆரோமான்சஸை வின்ஸ்டன் துறைமுகமென்று அழைக்கக்கூடும். என்னி நில மையிலும் அங்கு பின்கண்ட விவரங்கள் செதுக்கப்பட்ட ஒரு சிலாசாசனம் அமைக்கப்படும். "கடற்கரையில் உபயோகிப்பதற்காகத் தூண்கள், அவைகள் அலைகளில் அங்குமிங்கும் அசைய வேண்டும். இந்தப் பிரச்னையை நன்முய் ஆராய்ச்சி செய்யவேண்டும். இதைப்பற்றி விவாதிக்கக்கூடாது". இதேவார்த்தைகளைத்தான் மிஸ்ட்டர் சர்ச்சில் துறைமுக பாகங்களை உற்பத்தி செய்த நிபுணர்களுக்கு எழுதி அனுப்பினார்.

இந்த மனப்பான்மையுடன்தான் துருப்புகளையும், டாங்கிகளையும், பீரங்கிகளையும், லாரி களையும், வெடிமருந்தையும், உணவுப்பொருள்களையும் ஐரோப்பாவின் விடுதலைக்காகக் கொண்டு போவதற்கு லாயக்குள்ள ஒரு துறைமுகத்தை மணப்பாங்கான கடற்கரையில் அமைக்க பிரிடிஷ் மக்கள் உத்சாகத்துடன் வேலைசெய்து வந்தார்கள்.

---

## இருவகைப்பட்ட வெடி விமானத் தாக்குதல்.

### இரண்டும் ஒன்று பட்டுவிட்டன.

(விங் கமாண்டர் *L. V.* பிரேசர்).

டையில்பர்க்கைத் தாக்கிய நடவடிக்கை நேசதேச விமானப்படையின் ஒன்றுபட்ட நடவடிக்கையின் சக்தியை பலப்படுத்துகிறது. இந்தத் தாக்குதலில் இரண்டு லக்ஷியங்கள் உள. 1943-ம் வருஷ ஆரம்பத்தில் நடைபெற்ற தாக்குதலின் மூலம் ஜெர்மனியைத் தவிர மற்ற எல்லா தேசங்களும் தாக்குதல் கஷ்டங்களை அனுபவித்தன. இப்பொழுது நடக்கும் தாக்குதலைப் பார்த்தால் அது விளையாட்டுப்போன்றதென்று சொல்லலாம்.

மேற்கு ஐரோப்பாவில் முன்னேறும் நேசதேசப்படைகள் மேற்கு ஐரோப்பாவில் உள்ள வெடிகுண்டு வீசக்கூடிய லக்ஷியங்களை சுத்தி செய்துவிட்டன. அந்த லக்ஷியங்கள் இப்பொழுது ஜெர்மனியில் மிகுதியாக இருப்பதினால் இந்த ஒரு மாதத்தில் வெடி விமானங் களின் குண்டுவீச்சும் எட்டாவது விமானப்படையின் தாக்குதலும் இரட்டித்துவிட்டன. இந்த உண்மை பிரிடிஷ் பாம்பர் படையின் நடவடிக்கை புள்ளி விவரங்களிருந்து வெளிப் படுகிறது.

செப்டம்பர் மாதத்தில் பாம்பர் படையைச் சேர்ந்த விமானங்கள் 52,400 டன்கள் மொத்த எடைமானமுள்ள வெடிகுண்டுகளை வீசின. அவைகளில் பாதி 21,000 டன்கள் ஜெர்மனியிலுள்ள இலக்குகள் பேரில் விழுந்தன. பாக்கி பெரும்பாகம் லேஹாவர், போலோன், கலே முதலிய இடங்களை கைப்பற்றுவதற்காகப் பிரயோகிக்கப்பட்டன. ஏராள மான வெடிகுண்டுகளை பிரான்ஸிலுள்ள துறைமுகங்களைச் சுற்றியுள்ள ஜெர்மன் கோட்டை

கள், தற்காப்புபிராந்தியங்கள் பேரிலும் கேப் கிரிஸ் நெஸ்ஸிலுள்ள பெரியபீரங்கிகள் பேரிலும் போடவேண்டியிருந்தது. செப்டம்பர் மாதத்தில் போட்டதைப்போல சமமான எடைமானமுள்ள குண்டுகளை இப்பொழுது ஜெர்மனியிலுள்ள இலக்குகள் பேரில் பிரிடிஷ் வெடி விமானங்கள் போடக்கூடுமானால் இந்த மாதத்தில் ஜெர்மனி பேரில் போடப்படும் குண்டுகள் இரட்டித்துவிடும்.

அக்டோபர் மாதம் 15 நாட்களுக்குப்பின் கவனிக்கும்பொழுது பாம்பர் விமானங்கள் செப்டம்பர் மாதத்தில் போட்டதைவிட அதிகமான வெடிகுண்டுகளை வீசியிருக்கின்றன. அக்டோபர்௴ 1-ம் தேதிமுதல் அக்டோபர்௴ 16-ம் தேதிவரையில் வெடிவிமானங்கள் 30,535 டன்கள் எடைமானமுள்ள குண்டுகளை வீசியிருக்கின்றன. அவைகளில் 12,335 டன்கள் அக்டோபர்௴ 14-ம் தேதிக்கும் அக்டோபர்௴ 16—17-ம் தேதி இரவிற்கும் மத்தியில் ஜெர்மனி பேரிலேயே போடப்பட்டன.

அக்டோபர் மாதத்தில் ஜெர்மனிக்கு வெளியேயுள்ள இலக்குகளில் முக்கியமான டச்சுத் தீவுகளில் வால்சர்ன் என்ற தீவிலுள்ள ஜெர்மன் தற்காப்புகள்தான் முக்கியமாக தாக்கப்பட்டன. இதைத் தற்காப்பு செய்வதன் மூலம்தான் ஜெர்மனி நமக்கு ஆண்ட்வெர்ப் துறைமுகத்தை உதவாமல் செய்துவருகிறது. இந்தப் புள்ளி விவரங்கள் பிரிடிஷ் பாம்பர் படையினுடையவை. அமெரிக்க எட்டாவது விமானப் படையும் ஜெர்மனியிலுள்ள இலக்குகள் பேரிலும் வெடிகுண்டுகளை வீசிவருகின்றன. இதைத்தவிர சண்டை பாம்பர்கள், ஆகாச வாணங்களை வீசும் சண்டை விமானங்களைச் சேர்ந்த நடுத்தர, லேசான வெடி விமானங்களும் இவைகள் பிரிடிஷ் இரண்டாவது டாக்டிகல் விமானப்படை, அமெரிக்க ஒன்பதாவது விமானப்படையைச் சேர்ந்தவைகள்—ஜெர்மனியின் எல்லைச் சரகங்களில் திரட்டப்பட்டு ஜெர்மனியின் மேற்கு மாகாணங்களை அவைகள் தாக்கிவருகின்றன.

இவ்விதமான மகத்தான விமானத்தாக்குதலின் மர்மம் என்னவென்று நாம் சுலபமாகச் சொல்லமுடியாது. ஆகிலும் சென்ற $1\frac{1}{2}$ மாதத்திய அதன் சுருக்கத்தை மதிப்பிடக்கூடிய அநேக ஹேஷ்யங்கள் தோன்றியிருக்கின்றன. செப்டம்பர் மாதத்தில் பிரெஞ்சுத் துறைமுகங்களைச் சுற்றி வெடிகுண்டுகளை வீசியதன் பயனாக ராணுவ முறையில் அந்தத் துறைமுகங்கள் பிரிடிஷ் கனடியத் துருப்புகளிடம் சுலபமாக வசமாகின. நேசதேசத்தார்களுக்கு சொல்ப உயிர்ச் சேதம் ஏற்பட்டது. நாமிழந்த ஒவ்வொருவருக்கும் பதிலாக 50 ஜெர்மானியர்களைக் கைது செய்தோம்.

செப்டம்பர் மாதத்தில் பாம்பர் படையின் தாக்குதலின் பயனாக ஜெர்மனியிலுள்ள பெரிய நகரங்களான கெயிஸர் ஸ்லாடர், கார்ல்ஸ்ருஹி, பிரெமர்ஹெவன், மஞ்சன் கிளாட்பாக், ஆஸ்னுபிரக் டார்ம்ஸ்டாட் அழிவுபட்டன. எம்டன், மன்ஸ்டர், கீல், பிராங்க்பர்ட் முதலிய இடங்களிலும் அநேக பாகங்கள் அழிக்கப்பட்டன.

வெடிகுண்டுகளை வீசும் முறைகளும் இந்த வேனிர்காலத்தில் அபிவிருத்தியடைந்துவிட்டன. சிறிய படைப்பகுதிகள் சென்று பெரிய படைகளைப் போல அபாரமான நஷ்டத்தை உண்டுபண்ணிவிடுகின்றன. 200 லங்காஸ்டர் விமானங்கள் சென்று முக்கிய இருப்பாதையுள்ளதும், எதிரியின் ரசாயனப் பொருள் உற்பத்திசாலையுள்ளதுமான டார்ம்ஸ்டெட்டை அநேகமாக அழித்துவிட்டன.

மற்றொரு அபிவிருத்தியாதெனில், விமானங்கள் வருவதை எச்சரிக்கை செய்யக்கூடிய அமைப்புகள் வைக்கப்பட்டிருந்த தேசங்களை ஜெர்மனி இழந்துவிட்டதால் நமது விமானங்கள் நேராக ஜெர்மனிக்குள் சென்றுவிடுகின்றன. அங்குள்ள தற்காப்புகளை அழித்துவிடுகின்றன. நேசதேச விமானங்களுக்கு முன்னிருந்ததைவிட இப்பொழுது கால்மடங்குதான் விமான நஷ்டம் ஏற்படுகிறது.

அக்டோபர் மாத ஆரம்பத்தில் பாம்பர் படைகளுக்கு மூன்றுவிதமான சௌகரியங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதன் லக்ஷியங்கள் ஜெர்மனியிலிருக்கின்றன. குறைவான சங்கியை உள்ள விமானங்கள் அதிக நஷ்டத்தை உண்டு பண்ணுகின்றன. விமான நஷ்டமும் அதிக பலமாகயிருக்காதென்று நம்பக்கூடியதாக இருக்கிறது.

மற்றொரு முக்கியமான அம்சமுமிருக்கிறது. இருவகைப்பட்ட தாக்குதலும் சில சமயங்களில் ஒரே லக்ஷியத்தைக் குறி வைக்கின்றன. ஒரு தாக்குதலில் இரண்டு லாபங்களையும் சம்பாதித்துவிடலாம். ஜெர்மனியின் யுத்த உற்பத்திசாலைகளை அழித்துவிடுவதுடன் ஜெர்மனியின் எல்லைச் சரகத்தில் போர் புரிந்துவரும் நேசதேசப்படைகளுக்கும் ஒத்தாசை செய்துவிடலாம்.

அக்டோபர் மாதம் 14-ம் தேதியன்று டூயிஸ்பர்க்கைத் தாக்கியது இந்த முறையில்தான். பாம்பர் படைகள் ஒரு நாளிலும் மறுநாள் இரவிலும் டூயிஸ்பர்க் பேரில் 1,000 டன்கள் எடைமானமுள்ள உயர்தர வெடிகுண்டுகளையும் எரிவெடிகளையும் போட்டுவிட்டார்கள். யுத்தத்திலேயே இது மகத்தான தாக்குதலாகும்.

டேயிஸ்பர்கைத் தாக்கியதின் லக்ஷியம் ஜெர்மனியின் மகத்தான யுத்த தொழிற்சாலைகளை நொறுக்குவதுடன் அந்த நகரமும் முக்கியமான இருப்புப்பாதை, நதிப்போக்குவரத்து நிலயம், போர்முனைக்குப்பின் 35 மைலிலுள்ளது. ஆக்கனிலிருந்தும் நிஜமேகனிலிருந்தும் 50 மைல்களிருப்பதாலும் அது அழிக்கப்படவேண்டும்.

இந்தத் தாக்குதல் ராணுவ முறையிலும், போர்ப் படைகளுக்கு உதவி முறையிலும் சாதகமாக இருந்தது. அதிலுள்ள இருப்புப் பாதைகளும் கப்பல் கட்டும் தளங்களும் அழிபட்டுவிட்டதால் போர்முனையிலுள்ள ஜெர்மன் படைகளுக்கு அனுப்பக்கூடிய சர்பராக்கள் நின்றுபோய்விடும். இதே நடவடிக்கையில் ஜெர்மன் யுத்த தளவாட உற்பத்திசாலைகளிலுள்ள யந்திரங்களும் நொறுங்கிவிட்டன.

டேயிஸ்பர்க் தாக்குதல் உத்தமபக்ஷமான நடவடிக்கை. இதுபோன்ற நடவடிக்கை இதற்கு முன்பும் நிகழ்ந்திருக்கின்றன. ஸார் பிரதேசத்திலுள்ள நிலக்கரி பிரதேசத்தில் முக்கியமான நகரமாகவும் எஃகு உற்பத்தி தொழிற்சாலைகளுள்ளதுமான ஸார்பிரக்கன் அக்டோபர்மீ 5- தேதியன்றும் தாக்கப்பட்டது, அதில் போர்முனைக்காக ஜெர்மனி ஏராளமான துருப்புகளையும் குவித்துவைத்திருந்தது.

இவ்விதமாக நமது திட்டம் நிறைவேறிவருகிறது. நேசதேச விமானப் படையின் தாக்கும் இலக்குகள் ஜெர்மனியிலிருக்கின்றன. ராணுவ தந்திர முறையும் படைகளுக்கு உதவி செய்யும் முறையும் ஒன்றுபட்டுவிட்டன. நேசதேச கனமான வெடி விமானங்கள் ஜெர்மனியை மட்டும் தாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுவிட்டன.

---

## ஆல்பேனியா.

நாஸிகளின் அக்கிரம ஆக்கிரமணத்துக்குட்பட்ட நாடுகளில் ஆல்பேனியா முதல் ஸ்தானம் வகிக்கிறது. பால்கன் நாடுகளைச் சேர்ந்த இந்தச் சிறிய நாடு ஐரோப்பாவில் துருக்கியின் செல்வாக்குள்ள எல்லைச் சரகநாடு. முஸ்லீம் மன்னரான ஸாக்கின் ஆக்ஷிக்குட்பட்ட இந்த முஸ்லீம் தேசம் 11,000 சதுர மைல்கள் விஸ்தீர்ணமுள்ளது. பாலஸ்தீனம், ஸிலோனின் பாதி பரப்புள்ளது. அதில் $1\frac{1}{2}$ மிலியன் ஜனங்கள் வசித்துவருகிறார்கள். உன்னதமான குன்றுகளும், செழிப்பான பள்ளத்தாக்குகளுமுள்ள இந்த நாட்டில் ஜனங்கள் ஆடுமாடு மேய்ப்பது, விவசாயம் முதலிய தொழில்களை நடத்திவருகிறார்கள்.

பொருளாதார முறையில் பால்கன் நாடுகளுக்குள் ஆல்பேனியா மிகவும் ஏழ்மைத்தனமுள்ளது. ஜனங்கள் நெஞ்சுரப்புள்ளவர்களாகவும், சுதந்திரத்தை விரும்புகிறவர்களாகவும் இருக்கிறார்கள். ஸ்தம்பி நதிக்கு இருபக்கங்களிலும் இருவகைப்பட்ட கலைஞானம் காணப்படுகிறது. வடக்குப் பக்கத்தில் சமவெளிகளிலும், நகரங்களிலும் சன்னி வகுப்பு முஸ்லீம்களும், குன்றுகளுள்ள பிரதேசங்களில் கிருஸ்தவர்களுமிருக்கிறார்கள். தெற்குப் பக்கத்தில் கிரேக்கர்கள் வசித்துவருகிறார்கள். கிருஸ்தவ சாஸ்திரிகளும் அங்கு சிறுபான்மைக் கக்ஷியாக இருக்கிறார்கள். வடக்கிலுள்ள ஜாதியார்களில் பாடி என்ற நான்கு வகுப்பாளர்கள் ஆதிக்கம் பெற்றிருக்கிறார்கள். ஸாக் மன்னரும் ஸ்கூடாரி சமவெளியைச் சேர்ந்த "ஐந்து கொடிகளும்;' மாடி வகுப்பைச்சேர்ந்தவர்கள். தெற்கில் பெரிய பிரபுக்கள் வசித்துவருகிறார்கள்.

### சுதந்திரப் போர்.

ஸாக் மன்னனின் மகனுக்கு ஞானத் தகப்பனாக இருக்க டிரானாவுக்கு முஸோலினி சென்ற சில நாட்களுக்குப்பின் ஆல்பேனியாவை அவன் துரோக புத்தியுடன் 1939-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 9-ம் தேதி தாக்கினானென்பது எல்லோரும் அறிந்த விஷயம். டுரா சோத் துறைமுகத்திலிறங்கிய படைகளை, மேஜர் அப்பாஸ் குபி சிறிது காலம் எதிர்த்துப் போராடினான். ஏற்பாடான எதிர்ப்புக் கலைக்கப்பட்டுவிட்டபோதிலும் ஆல்பேனியர்கள் கொரில்லாப்போரை நடத்தினார்கள். 1941-ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் ஜெனரல் பிராசிட்ஸிடமுள்ள ஜெர்மானியர்கள் கிரீஸைப் படையெடுத்தபொழுது அவர்கள் ஆல்பேனியா மார்க்கமாகச் சென்றார்கள்.

ஆல்பேனியாவில் 30 முதல் 60 கொரில்லாப் படைகள் எதிர்த்துப் போராடுகின்றனவென்று கேள்விப்படுகிறோம். வடக்கிலும், தெற்கிலும், மத்தியிலும், மூன்று பெரிய கொரில்லாப் படைகளிருக்கின்றனவென்று மேஜர் ஆட்லி காமன்ஸ் சபையில் சமீப காலத்தில் வெளியிட்டார். தெற்கிலுள்ள தேசிய விடுதலை ஸ்தாபனம் அதிக செல்வாக்குள்ளது. தெற்கில் வேலை செய்துவந்த பாக்காம் பேடர் அல்லது தேசிய முனைக்கப்பதிலாக இது அமைக்கப்பட்டிருக்கிறது. மத்தியில் ராஜவிசுவாசியான மேஜர் அப்பாஸ் குபியின் தலைமையில் நியாயமான ஸ்தாபனம் ஒன்று நிலைபெற்றிருக்கிறது.

### விடுதலைக்காக முதல் நடவடிக்கை.

மிஸ்டர் ஈடனும், மிஸ்டர் ஹல்லும், M. மாலடாவும் எதிரியை எதிர்த்துப் போராடும் பல்வேறு கொரில்லாப் படைகளின் முயற்சிகளைப் பாராட்டியும் இதாலிய ஆதிக்கத்திலி

ருந்து ஆல்பேனியா விடுவிக்கப்பட்டு சுதந்திரம் பெறவேண்டுமென்ற விருப்பத்தையும், வெளியிட்ட கூட்டறிக்கைக்குப்பின்தான் கொரில்லாப் படைகள் ஒன்று சேர்ந்தன. இந்த அறிக்கையைக் கேட்டபின் எல்லா கக்ஷியின் பிரதிநிதிகளும் 1942-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் டிரானுவுக்குத் தென்மேற்கில் 10 மைல் தூரத்திலுள்ள பேசாவில் கூடினார்கள். அங்கு ஒற்றுமை ஏற்பட்டது.

பேசாவின் அதிகாரத்துக்குள் நான்கு முக்கிய கோஷ்டிகளிருக்கின்றன. மற்ற சில முக்கியமான தலைவர்கள் பின்வருமாறு. படைகளின் மாஜி ஆபீஸரான கர்னல் முகரம் பேயி ஜாக்டாரி, டிரானுவைச்சேர்ந்த ஆசிரியரான டாக்டர் சாபெட் பக்தி, மாரடாவிலுள்ள டெர்விஷ் சந்நியாசி மடத்தின் குருவான பாபா பாஜா.

ஆல்பேனியாவின் விடுதலையில் மூன்று கட்டங்களிருந்தன :—முதலில் எதிர்ப்பு கோஷ்டிகள் ஒன்றுபட்டன. இரண்டாவதாக, 1943-ம் வருஷத்தில் பிரிகேடியர் பிராங் டேவிஸ் தலைமையின் கீழ் பிரிடிஷ் ராணுவ கோஷ்டி ஆல்பேனியாவிற்கு வந்தது. மூன்றாவதாக, எட்ரியாடிக் கடலிலிருந்த தரைப்படைகள் 1944-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 27-ம் தேதியன்று ஆல்பேனியாவிலிறங்கின. இதன் மூலம் ஜெனரல் பேனி தலைமையிலுள்ள ஜெர்மன் ஆக்ஷியிலிருந்து ஆல்பேனியாவின் விடுதலை பூர்த்தியாயிற்று. சாசெனுத் துறைமுகத்துக்காகக் கடும் போர் நடைபெறுகிறது. அக்டோபர் 11-ம் தேதியன்று சாரண்டா துறைமுகம் விடுவிக்கப்பட்டது. தெற்கு கிரீஸை ஜெர்மனி காலிசெய்வதும், யூகோஸ்லாவியாவுக்குள் ஜெர்மனி முன்னேறுவதும் இந்த விடுதலையை துரிதப்படுத்தும்.

---

## ஜெனரல் மாக் ஆர்தர் பிலிப்பைன்ஸுக்குத் திரும்பி வந்தார்.

### அமெரிக்கர்களுக்கு முக்கியமான நாள்.

(டெயிலி ஹெரால்ட்).

பிலிப்பைன்ஸை விடுவிப்பதுடன் அநேக காரியங்கள் நடைபெறவேண்டியிருப்பதால் கடுமையாகப் போரை நடத்த வேண்டியிருக்கும். இந்தத் தீவுகளின் நஷ்டத்தினால் ஏற்பட்ட சிரமங்களை அரக்கானிலிருந்து போர்னியோ வரையிலுமுள்ள ஜப்பானிய ஸோல்ஜர்கள் உணருவார்கள். அவர்களுக்கு வரும் சப்ளை மார்க்கங்கள் துணிக்கப்பட்டுவிடும். ஜப்பானுக்கு எண்ணெய், உணவுப் பொருள், இயற்கைப் பொருள்களின் சப்ளையும் நின்றுவிடும்.

லேட்டியைத் தாக்கியதிலிருந்து அமெரிக்க கடற் படை பலம் ஓங்கிவிட்டதென்று வெளியாகிறது. இதே சமயத்தில் பிரிடிஷ் கடற்படை நிக்கோபார் தீவுகளின் பேரில் பீரங்கிப் பிரயோகம் செய்வதிலிருந்து தூரக் கிழக்கு சமுத்திரத்திற்கு பிரிடிஷ் கடற்படை இப்பொழுது கட்டாயப் போர்புரிய வேண்டும். பார்மோஸாவை நாம் தாக்கியபொழுது அது போர்புரிய மறுத்தது.

இந்த மகத்தான போரின் ஆரம்ப காலத்தில் நடைபெற்ற சம்பவங்களை நாம் மறக்க முடியாது. கடற் படை நியூகினியாவிலிருந்து புறப்பட்டது. ஆஸ்திரேலியர்களும், அமெரிக்கர்களும் ஒரு காலத்தில் மிகவும் பலமானதாக இருந்த ஜப்பானியப் படையைச் சின்னாபின்னப்படுத்தியிராவிட்டால் இது நடைபெற்றிராது. இதற்கு முற்போக்காக பலமான விமானத் தாக்குதல் நடைபெற்றது. அமெரிக்கர்கள் மத்திய பஸிபிக்கில் ஒவ்வொரு தளமாகப் பிடித்துக்கொண்டு சமீப தூரத்தில் வந்திராவிட்டால் இது நடைபெற்றிருக்காது. சுதந்திர சைனாவில் அமெரிக்கா விமானதளங்களை அமைத்திராவிட்டாலும், சூபர் பறக்கும் கோட்டை விமானங்கள் ஜப்பானிய விமானங்களையும், ஜப்பானியக் கப்பல்களையும் அழிக்கும் நடவடிக்கையில் பங்கெடுத்துக்கொண்டிருக்க முடியாது.

ஜெனரல் மாக் ஆர்தர் சில சகாக்களுடனும், இரண்டு மோட்டார் படைகளுடனும் பிலிப்பைன்ஸை விட்டு வெளியேறினார். இப்பொழுது ஜப்பானின் முக்கியமான படைகளை எதிர்த்துப் போராடுவதற்குச் சக்தி பெற்ற சேனைகள், கடற்படை, விமானப் படையுடன் திரும்பி வந்துவிட்டார். அவருக்கும், அமெரிக்கர்களுக்கும் இது முக்கியமான நாளாகும்.

---

## பிலிப்பைன்ஸ் தீவின் தலைவரான ஆஸ்மேனு.

ஸ்பானிஷ் அமெரிக்க யுத்த முடிவில் பிலிப்பைன்ஸின் நிர்வாகப் பொறுப்பை அமெரிக்கா ஏற்றுக்கொண்ட நூற்றாண்டிலிருந்து ஆஸ்மேனு, க்வீஸான் என்ற இருவர்களின் ராஜீய வாழ்க்கைகள் ஒன்றுபடுத்திச் சொல்லப்பட்டன. ஒரு அம்சத்தைத் தவிர அவ்விருவரும் ஒரே மாதிரியான நடவடிக்கை உள்ளவர்கள்தான். அவ்விருவரும் தங்களுடைய நாட்டிற்கு சுதந்திரத்தை சம்பாதிக்க அதிக ஊக்கமுள்ளவர்கள். இருவரும் இந்த லக்ஷியத்தை அடைய வெகுகாலமாக உழைத்து வந்தார்கள். ஆகிலும் அவர்களுடைய முறைகள் முற்றிலும் மாறுபாடானவை. க்வீஸான் போர்வீரர், நல்ல உருக்கமான சொற்பொழிவாளர், தன்னு

டைய சுதந்திர அபிப்பிராயங்களை விளக்கிக் காட்டக்கூடியவர். இதற்கு மாருக, ஆஸ்மானு அல்ல போர்வீரரானபோதிலும், அவர் பொறுமையுள்ளவர், விடாமுயற்சியுள்ளவர். அவர் வித்தியாசங்களை சரிக்கட்டி சமாதானத்தை நிறுவுவதில் சாதுர்யமுள்ளவர் என்று சொல்லப்படுகிறது.

## உருக்கமான சொற்பொழிவாளர்.

ஆஸ்மேனு ஜனங்களைத் தன்னுடைய வழியில திருப்பிவிட சக்தி பெற்றிருந்ததால், சுதந்திரத்தை அடையக்கூடிய மார்க்கம் சுலபமாகிவிட்டது. க்வீஸான் படபடப்புள்ள நியந்தா. ஆஸ்மேனு இனிமைக் குரலுள்ளவர், தன்னுடைய லக்ஷியத்தை விட்டுப் புரளாதவர். இருவரும் தனிப்பட்ட முறையில் சுதந்திரத்திற்கு எவ்விதம் பாடுபட்டிருக்கக்கூடுமென்றும் சிலர் சந்தேகப்பட்டார்கள். இருவரும் சேர்ந்தால் ஒருவரும் எதிர்த்து நிற்க முடியாது. ஒருவனை அவனுடைய போக்கையும் காரியாம்சையும் கண்டு நாம் மதித்துப் பார்க்கவேண்டும். பிலிப்பைன்ஸின் முதல் அஸெம்பிளியின் தலைவராக இருந்தது முதல் ஆஸ்மேனு ஜனநாயகக் கொள்கைகளை பிரகடனம் செய்துவந்தான். சுதந்திரத்தை அவன் பலமாக ஆதரித்த போதிலும், அமெரிக்காவுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தால்தான் பிலிப்பைன்ஸுக்கு நிரந்தரமான சுதந்திரமும், பத்திரமும் கிடைக்குமென்று அவன் பலமாக நம்பினுன். நாட்டின் கலை ஞான மூலத்தை விவரணம் செய்து, மேற்கு நாடுகளுடன் ஒத்துழைத்தால்தான் கலை ஞானம் நிலைபெற்றிருக்குமென்றும் அவன் சொல்லிவந்தான்.

அவன் பின்வருமாறு சொன்னுன்.

"கலைஞான அம்சத்தில் மூன்று நூற்றுண்டுகளாக பிலிப்பைன்ஸின் கலைஞானம் மேநாட்டுக்கொள்கைகளைப் பின்பற்றியுள்ளது. ஆகையால் பிலிப்பைன்ஸ், அமெரிக்காவுடன் ஒத்துழைப்பது அவச்யமாகும். எதிர் காலத்தில் சுதந்திர யுத்தத்திலும் இந்த கலைஞான சம்பந்தங்கள் நீடித்திருக்கும். .

"அமெரிக்காவுடன் நாம் பெற்றிருந்த தொடர்பு மூலம் சுய ஆக்ஷி புரிய நாம் யோக்கியதை உள்ளவர்கள் என்பதை ருஜூச் செய்துவிட்டோம். இந்த சக்தியை அமெரிக்கர்கள் ஒப்புக்கொள்ளும்படிக்கும் சுதந்திரத்தை அளிப்பதாக வாக்குறுதி செய்யும்படிக்கும் நாம் சமாதான முறையில் அமெரிக்காவைக் கட்டாயப்படுத்திவிட்டோம். பாட்டானில் நடைபெற்ற நான்கு மாதக் கடும்போரில் அமெரிக்கப்படைகளுடன் பிலிப்பினேக்களும் நின்று உயிர் துறந்ததன் மூலம் சுதந்திரம் பெறக்கூடிய உரிமைக்கும் ஜனநாயகத்திலுள்ள நமது பற்றுதலுக்கும் நாம் லாயக்குள்ளவர்களென்று பரிலக்ஷ செய்யப்பட்டுவிட்டது. நமது நாட்டைக் காப்பாற்றக்கூடிய சக்தியும் நம்மிட மிருக்கிற தென்பதையும் நாம் ருஜூப்படுத்திவிட்டோம்.

"இப்பொழுது பிலிப்பைன்ஸுக்கு சுதந்திரமளிக்கப்படுமென்றும், அதற்கு ரக்ஷணையளிக்கப்படுமென்றும் அமெரிக்கா வாக்குறுதி செய்துவிட்டது. இந்த வாக்குறுதி பிலிப்பைன்ஸிலிருந்து ஜப்பானியர்கள் துரத்தியடிக்கப்பட்ட பின்னும், சுதந்திரமுள்ள ஜனநாயமுள்ள ஆட்சி ஸ்தாபிக்கப்பட்டபின்னும் நிறைவேறிவிடும்."

பிலிப்பைன்ஸ் குடியரசு நாடுகளின் நிர்வாகத்தின் தலைவரான ஆஸ்மேனு எதிர்காலத்தில் அதிக நெருக்கடி ஏற்படுமென்பதை அறிவார். ஜப்பானிய ஆக்கிரமணத்தின் காரணமாக தனது நாட்டிலிருந்து துணிக்கப்பட்டிருக்கும் ஆஸ்மேனு தன்னுடைய நிர்வாக சபையுடனும், சிப்பந்திகளுடனும், அமெரிக்க நிர்வாக அதிகாரிகளுடனும், பிலிப்பைன்ஸின் விடுதலைக்கும் நாட்டின் புனருத்தாரணத்திற்கும் திட்டங்களை நிறுவி வருகிறுர்.

---

# லூசானுக்கும் பார்மோஸாவுக்கும் நடுவிலுள்ள வழியின் ஆதிக்கம்.

## டாக்ளோபானின் ராணுவ முக்கியத்துவம்.

(டைம்ஸ் பத்திரிகை).

பிலிப்பைன்ஸுக்கு ஜெனரல் மாக் ஆர்தர் திரும்பி வந்ததின் ராஜீய, ஆத்மீக அம்சங்கள் ஜப்பானுடன் நடைபெறும் போரின் முக்யத்துவத்தை பங்கப்படுத்திவிடுகிறது.

பசிபிக்கில் மிகவும் பெரிய துணைக்காவல் கப்பல் கூட்டத்தைக் கொண்டுபோய் லேடியின் கடற்கரையில் இறக்கிய இடமான டாக்ளோபான் நேசதேசத்தார்களுக்கு பிலிப்பைன்ஸின் பாக்கி பாகங்களை மீட்கக்கூடிய அநேக விமான தளங்களை அளிக்கக்கூடும். அந்த விமான தளங்கள் மூலம் லூசானுக்கும், ஜப்பானின் பார்மோஸாவுக்கும் நடுவிலுள்ள வழியை நமது வசமாக்கிவிடும். தெற்கிலுள்ள தேசங்களையும், போர்னியோவிலும், சுமாத்ராவிலும் உள்ள எண்ணெய் பிரதேசங்களையும், காப்பாற்ற அந்த மார்க்கம் ஜப்பானுக்கு மெத்த அவசியமாகும்.

படைகளைக் குவிப்பதிலும், துணைக்காவல் கப்பல் கூட்டத்திலும், கடற்படை விமானப் படையின் ஒத்துழைப்பிலும், பசிபிக் போர்முனையில் இப்பேற்பட்ட சம்பவம் நடைபெற்ற

தில்லை. இரண்டு வருஷங்களாக தங்களுடைய கடல் என்று ஜப்பானியர் பாத்தியம் கொண்டாடிய மார்க்கத்தில் நூற்றுக்கணக்கான கப்பல்கள் 1500க்கு மேற்பட்ட மைல்களைக் கடந்து சென்றிருக்கின்றன. அந்தக் கப்பல்கள் நியூகினியாவிலுள்ள புதிதாக அமைக்கப் பட்டுவரும் தளங்களிலிருந்து புறப்பட்டன. இந்த தளங்கள் ஐந்து மாதங்களுக்குள் அமைக்கப்பட்டதென்றால் நேசதேசத்தார்களின் சாதுர்யமான அமைப்பும், சர்பராக்களைக் குவிப்பதும் திறமையுடன் நடைபெறுகின்றதென்று புலப்பட்டுவிட்டது.

கடலில் பிராபல்ய சமத்துவமும், நிச்சயமாக ஆகாயத்தில் பிராபல்ய சமத்துவமும் நேச தேசத்தாருக்கு சாதகமாகயிருப்பதால், அமெரிக்கர்கள் ஜப்பானையே நேர்முகமாகத் தாக்கும் சமயம் வந்துவிட்டதென்று தோன்றுகிறது. ஜப்பானுக்கு இப்பொழுது நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதை அது எதிர்பார்த்திருக்கக்கூடும். ஆகிலும் அதைத் தடுக்க சக்தி பெற்றிருக்கவில்லை. மத்திய பிலிப்பைன்ஸில் படைகளிறங்கக்கூடுமானால் லூஸானிலுள்ள மற்ற உபயோகமுள்ள பாகங்களைத் தவிடு பொடியாக்கி அவைகளையும் வசப்படுத்திவிடலாம். அங்குள்ள விமானதளங்கள் கைவசமாகி விட்டால் லூசானுக்கும், பார்மோஸாவுக்குமிடையேயுள்ள ஜலசந்தியின் ஆதிக்கம் நமது வசமாகிவிடும். இந்த ஜல சந்திதான் தெற்கு சீனக் கடலுக்குப் போகும் சப்ளை மார்க்கத்துக்குக் கழுத்துப்போன்றது.

---

## ஜப்பானின் உள்நாட்டுத் தற்காப்புகளைத் தாக்குவது.

### பசிபிக்கில் நேசதேசத்தார்களின் திட்டங்கள்.

(டெயிலி டெலிகிராப்).

ஜப்பான் ஆக்கிரமித்துள்ள மகத்தான தேசங்கள் பேரில் பலமான தாக்குதல் ஆரம்ப மாகிவிட்டது. இது கடல் மார்க்கமாக இருபுறத்திலிருந்து ஏற்பட்ட தாக்குதலாகும்.

கிழக்கில் ஜெனரல் மாக் ஆர்தர் மத்திய பிலிப்பைன்ஸில் மதிப்பற்ற ஊன்றுகோலை சம்பாதித்துவிட்டார். அவருடைய படைகள் முன்னேறும் வாசலை விஸ்தாரப்படுத்தி வருகின்றன. மேற்கில் பிரிடனின் கடற்படை நிகோபார் தீவுகளை இடைவிடாது தாக்கியிருக் கிறது. இவ்விரண்டு தாக்குதல்களும் நேசதேசத்தாரின் ஜப்பானைத் தாக்கும் யுத்த தந்திரத் தின் ஒன்றுபட்ட நடவடிக்கையாகும். ஒரு வருஷத்துக்கு முன் தான் பெர்ல் துறைமுகத்தில் நடந்த பத்திரிகாசிரியர் மகாநாட்டில் அமெரிக்க கடற்படை நேர்கோடாக சைனாவின் கடற்கரைக்குச் சென்றுவிடுமென்று கடற் தளபதி நிமிட்ஸ் சொன்னார். அதிலிருந்து ஜப்பானின் எல்லைப்புற தற்காப்புகள் ஒன்றன்பின் ஒன்றாக அழிக்கப்பட்டன. இப்பொழுது ஜப்பானின் உள்நாட்டுத் தற்காப்புகள் தாக்கப்படுகின்றன. பசிபிக் போருக்கு குளிகை போன்ற அம்சம் கடற்தளபதி நிமிட்ஸ் அறிக்கையில் அடங்கியுள்ளது.

ஜப்பானிய ராணுவம் அகலக்கால் வைத்துவிட்டதால் அது எந்த இடத்திலும் வலுவுட னிருக்க முடியாது. ஜப்பானுக்கு ஏராளமான நஷ்டம் ஏற்பட்டுவிட்டதால் எல்லா விடங் களிலும் அதன் வலிமை குன்றிவிட்டது. 2,000 மைல்கள் நீளமுள்ள ஒரு நேர்கோட்டின் இரு ஓரங்களிலும் தாக்குதல் ஏற்பட்டதற்கும் இதுதான் காரணம். இதன்மூலம் எதிரி படைகளை ஓரிடத்தில் குவித்துவிடும் நடவடிக்கை தடைபட்டுவிடும்.

---

## பிரிடனின் யுத்த முயற்சி நன்கொடை.

### தேசீய சேமிப்பு கடன் திட்டம்.

(விக்டோரியா சாப்பல்).

இன்று பிரிடனில் கஷ்டப்பட்டு வேலை செய்யாதவருமில்லை. ஆயிரக்கணக்கான பிரிடிஷ் ஆடவர்களும், ஸ்திரீகளும் போர்ப்படைகளில் சேர்ந்திருக்கிறார்கள். லக்ஷக்கணக் கானவர்கள் வெடிமருந்துகளையும், கப்பல்களையும், விமானங்களையும் உற்பத்தி செய்துவருகி றார்கள்.

அவர்களுக்கு நல்ல ஊதியம் கிடைத்துவருகிறது. ஆனால் வாங்குவதற்கு அதிக பண்டங் களில்லை அரசாங்கத்தாரும் அனாவசியமான பொருள்களை உற்பத்தி செய்ய அனுமதிக்க வில்லை. பொருள் மிகுதியுள்ளவர்கள் எஞ்சியுள்ள விலையுயர்ந்த பொருள்களை வாங்கி, அனாவசிய மாகச் செலவு செய்துவிடுவார்களென்ற பீதி ஒரு சமயம் இருந்தது.

இதைத் தடுப்பதற்காக தினசரி தேவைகளுக்குப் போதுமான அளவிற்கு அதிகமாக பொருளை பொதுஜனங்கள் நிர்வாகத்துக்குக் கடனாகக் கொடுக்க வேண்டுமென்று உத்திர விடப்பட்டது.

1940-ம் வருஷத்தில் பிரிடன் தன்னந்தனியே நின்று ஜெர்மனியை எதிர்த்துப் போராட வேண்டிய நிலைமை ஏற்பட்டபொழுது இந்த திட்டம் அமுலுக்கு வந்தது. பிரிடிஷ் மக்கள் வெற்றிபெற வேண்டுமென்று உறுதிகொண்டிருந்ததால் சேமிப்பு ஆபீஸ்களில் பணம் ஏராள

மாக முதலீடு செய்யப்பட்டது. இந்த திட்டம் துரிதமாகப் பரவிற்று. இன்று ஒவ்வொரு நகரத்திலுள்ள ஒவ்வொரு தெருவிலும், ஒவ்வொரு கிராமத்திலும் வசிப்பவர்கள் தொகையை வசூலிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். பள்ளிக்கூடங்களும், ஆபீஸ்களும், தொழில் ஸ்தாபனங்களும், போர் படைகளும் சேமிப்பு சங்கங்களை ஏற்படுத்தியிருக்கின்றன.

அடிக்கடி அநேக புதிய திட்டங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன ஒரு திட்டத்தின் மூலம் பிரிடன் அநேக டாங்கிகளை வாங்கிற்று. ஒவ்வொரு நகரமும் இதற்காக ஒரு வாரத்தை ஏற்படுத்தியது. அடுத்தபடியாக ஆகாயப்படை வெற்றிவாரம் நடைபெற்றது. விமானங்களை வாங்க ஏராளமான பொருள் திரட்டப்பட்டது. ஒரு நகரம் மட்டும் வெடிவிமானப்பகுதியை அமைக்கப் போதுமான பொருளை நன்கொடையளித்திருக்கிறது. மற்றொன்று $1\frac{1}{2}$ மடங்குள்ள விமானப்படையைத் திரட்ட பொருளீயட்டிற்று. இதே விதமாக ஜனங்கள் யுத்தக்கப்பல்களுக்கும் உதவியளித்திருக்கிறார்கள். கப்பல்கள் அந்தந்த ஊர் பெயரை வகிக்கின்றன. அதன் பின் "சேனைக்குப் பாராட்டு" என்ற வாரம் கொண்டாடப்பட்டது. அதில் ஒவ்வொரு நகரமும் கிராமமும் அதன் லக்ஷியத்தை அதிகப்படுத்தியது. கொண்டாட்டங்கள், பாண்டுகள், ஊர்வலங்கள் மூலம் ஜனங்களுக்கு உத்சாகம் ஊட்டப்பட்டது. சேனைக்கு உதவ லண்டன் மட்டும் ஏராளமான பொருளை நன்கொடை கொடுத்தது.

யுத்தத்தில் வெற்றிபெற்றபின் பிரிடிஷ் மக்கள் பொருளைத் தாராளமாகச் செலவிடும் உரிமையைப் பெறுவார்கள். அதுவரையில் அவசியமானதைத் தவிர மற்றவைகளை உபயோகிக்காமலும் பொருளை சேமித்து யுத்த தினசரி செலவிற்கு தேசத்துக்குப் பொருளைக் கடன் கொடுப்பதற்கும் பிரிடன் தயாராக இருக்கிறது.

---

## யுத்தத்துக்குப்பின் உலக சீர்திருத்தம்.

### (12) இந்தியாவின் எதிர்காலத்தையமைப்பதில் விஞ்ஞான சாஸ்திரத்தின் பாகம்.

**பிரிடனுக்கு இந்திய விஞ்ஞான சாஸ்திரிகளின் விஜயம்.**

**(டைம்ஸ் பத்திரிகை.)**

ஐந்து கியாதிபெற்ற இந்திய விஞ்ஞான சாஸ்திரிகள் பிரிடனுக்கு விஜயம் செய்திருப்பதற்கு சென்ற வருஷக் கடைசியில் பிரிடிஷ் சங்கம் முயற்சி செய்ததுதான் காரணமாகும். யுத்தம் காரணமாக மேதாவிகளுக்குள் ஏற்படக்கூடிய தொடர்புக்கு இடையூறு ஏற்பட்டதால் பிரிடிஷ் விஞ்ஞான சங்கம் ஆசிரியர் A. V. ஹில்லை அனுப்பி டில்லியில் ஒரு மகாநாட்டைக் கூட்டும்படி ஏற்பாடு செய்தது. பிரிடிஷ் விஞ்ஞான சங்கத்தின் சார்பாக அவர் அனுப்பிய அழைப்புக்கிணங்க இந்திய விஞ்ஞான சாஸ்திரிகளில் சிலர் இங்கு விஜயம் செய்திருக்கிறார்கள். பிரிடனில் சுற்றுப் பிரயாணம் முடிந்தபின் அவர்கள் அமெரிக்காவுக்குச் செல்லுவார்கள்.

விஞ்ஞானசாஸ்திர முறையில் உயர்தரமான ஒத்துழைப்பு ஏற்படவேண்டுமென்பதுதான் முக்கிய நோக்கம். சாதாரணமான தொடர்புகளுக்கு இடஞ்சல் ஏற்பட்டதிலிருந்து இந்தியா கஷ்டங்களுக்குள்ளாகியிருக்கிறது. ஏனெனில் இந்த மேற்கு நாடுகளிலிருந்து, விஞ்ஞானசாஸ்திர முறைகளையும், அதில் பயிற்சியையும் பெற்றிருக்கிறது. எதிர்பார்க்கிறபடி இந்தியா பொருளாதார முன்னேற்றம் அடையவேண்டுமானால், இந்திய மாணவர்களுக்கு கடல் தாண்டிச்சென்று பயிற்சி பெறவும், அபிப்பிராயங்களைக் கலந்துகொள்ளவும், வசதி அளிக்கப்பட வேண்டும். தூரக்கிழக்குப் போரும், நேசதேசத்தின் முக்கிய ராணுவ தளமாக இந்தியா மாறிவிட்டதும், நவீன யுத்த முறைப்படி சேனைகளுக்கு இந்தியாவில் முஸ்தீப்புகள் வழங்கியதும், அந்த முஸ்தீப்புகளைத் தயாரிக்க இந்திய கைத்தொழில்கள் செய்த மகத்தான முயற்சிகளும், நவீன நாகரீகத்தில் விஞ்ஞானசாஸ்திரம் எவ்வளவு பிரயோஜனமுள்ளதென்பதை இந்தியர்களுக்கு மிகுதியாக அறிவூட்டிவிட்டன. இந்தியாவின் எதிர்கால க்ஷேமத்தை அமைப்பதில் விஞ்ஞானசாஸ்திரம் பங்கெடுத்துக்கொள்ளுமென்பதையும் எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

சென்ற மார்ச்சு மாதத்தில் ஜனங்களின் ஒவ்வொருவருடைய வருவாயையும் இரட்டித்துவிட பம்பாயிலுள்ள தொழிலாளிகள் 15 வருட திட்டமொன்றை நிறுவினார்கள். பொருளாதார, ஜனசமூக அபிவிருத்தியின் முதல் தகுதியாக இந்தியா கவர்ன்மெண்டாரும் ஐந்து வருஷ திட்டத்தை நிறுவி வருகிறார்கள். மூன்று மாதங்களுக்குமுன் அவர்கள் வைஸ்ராயின் நிர்வாக சபையில் திட்ட இலாகா ஒன்றை ஏற்படுத்தினார்கள். அந்த இலாகாவுக்கு நிர்வாக, வியாபார அனுபவம் பெற்ற ஸர் அர்தேஷீர் டாலால் தலைமை வகிப்பார். பம்பாய் திட்டத்தை சர்ச்சை செய்வதில் ராஜீயமும் கலக்கப்பட்டுவிட்டது. இந்தியாவுக்கு நெருக்கடியான இச்சமயத்தில் இந்தியாவின் க்ஷேமத்திற்காகப் பாடுபடுகிறவர்கள் மேற்கு நாடுகளுடன், முக்கியமாக பிரிடனுடன் ராஜீய விஷயங்களிலும், கொள்கைகளிலும் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

இந்த விஷயத்தில் ராஜீய அபிவிருத்திகளை கூட்டுறவின் முன்னேற்றமும் ஒரு சிறிது உத்சாகப்படுத்தக்கூடும். மனித வாழ்க்கையின் முன்னேற்றத்தில் விஞ்ஞான சாஸ்திரம் அரிய சேவை செய்யக்கூடுமென்று உலகம் பூராவும் எதிர்பார்த்து நிற்கிறது. இது வெகு காலமாக சாத்தியமாக இருந்தபோதிலும் பீதியினாலோ அல்லது யுத்த அவசியத்தினாலோ தடைபட்டிருக்கிறது. இந்தியா சந்தர்ப்பத்தை நழுவ விட்டுவிட்டதென்பது வாஸ்தவம் தான். ஆனால் இப்பொழுதிருப்பதைப்போல எப்பொழுதும் செளகரியமான நிலைமை காணப்படவில்லை. யுத்தம் காரணமாக இந்தியாவின் செல்வம் அதிகரித்திருக்கிறது. இந்த தூதின் காரணமாக விஞ்ஞான சாஸ்திரிகள் வெளியிடும் ரிபோர்ட்டுகள் இந்தியாவின் ஜனங்களின் எதிர் கால க்ஷேமத்திற்குப் பொருந்தக்கூடியதாக இருக்கவேண்டும். இந்த லக்ஷியத்தை மனதில் வைத்துக்கொண்டு முற்போக்கான அபிப்பிராயங்களுக்கும், முற்போக்கான நடவடிக்கைகளுக்கும், குந்தகம் ஏற்படக்கூடிய விவகாரத்துக்குறிய பிரச்னைகளைத் தலைகாட்டும்படி நாம் அனுமதிக்கக்கூடாது.


## 'வி' டயரி-1945.

(குறிப்பு புஸ்தகம்).

**லினன் ரு. 1—8—0; ஷீப்ஸ்கின் ரு. 1—12—0; மொராக்கோ ரு. 2—4—0.**

தபால் செலவு (பிரத்தியேகம்):—ரிஜிஸ்தர் புக் போஸ்ட்டில் முதல் காபிக்கு ரு. 0—4—3

அத்துடன் சேர்த்து அனுப்பும் ஒவ்வொரு காபிக்கும் ஒவ்வொரு அணா.

காபிகளுக்குமுந்துங்கள்! **22-11-44** முதல் ஸ்டேட் அச்சாபீஸில் விற்பனைக்குக் கிடைக்கும்.

கீழ்க் கண்ட விலாசத்திலிருந்து வாங்கிக்கொள்ளலாம்:—

காரியதரிசி,

தேசீய யுத்த முன்னணி நிலயம்,

புதுக்கோட்டை (தென் இந்தியா).


## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 222. (2-வது பிரிவு).

| | | | |
|---|---|---|---|
| 4-11-44 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 |
| 5-11-44 | பூவரசகுடி | ... ,, | 7.00 |
| ,, | வேங்கடக்குளம் | ... ,, | 7.30 |
| 6-11-44 | வெங்களூர் | ... ,, | 7.00 |
| ,, | கோனாபட்டு | ... ,, | 7.30 |
| 7-11-44 | பனையப்பட்டி | ... ,, | 7.00 |
| ,, | ராங்கியம் | ... ,, | 7.30 |
| 8-11-44 | காலேஜ் A இங்கிலீஷ் | ... காலை | 11.00 |
| ,, | காலேஜ் B தமிழ் | ... ,, | 11.00 |
| 8-11-44 | C. S. M. பள்ளிக்கூடம் | ... காலை | 10.00 |
| ,, | ராணி பெண் பாடசாலை | ... ,, | 10.45 |
| ,, | குழிபிறை | ... மாலை | 7.00 |
| ,, | செவலூர் | ... ,, | 7.30 |
| 9-11-44 | கொடும்பாளூர் | ... ,, | 7.00 |
| ,, | விராலூர் | ... ,, | 7.30 |
| 10-11-44 | நச்சாந்துபட்டி | ... ,, | 7.00 |
| ,, | விராச்சிலை | ... ,, | 7.30 |

### பிரஸங்கம் 223. (3-வது பிரிவு).

| | | | |
|---|---|---|---|
| 11-11-44 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 7.00 |
| 12-11-44 | சூரக்காடு | ... ,, | 7.00 |
| ,, | கோட்டைக்காடு | ... ,, | 7.30 |
| 13-11-44 | தென்னதிரயன்பட்டி | ... ,, | 7.00 |
| ,, | விசலூர் | ... ,, | 7.30 |
| 14-11-44 | மழையூர் | ... ,, | 7.00 |
| ,, | காம்பக்குடி | ... ,, | 7.30 |
| 15-11-44 | காலேஜ் A இங்கிலீஷ் | ... காலை | 11.00 |
| ,, | காலேஜ் B தமிழ் | ... ,, | 11.00 |
| 15-11-44 | C. S. M. பள்ளிக்கூடம் | ... காலை | 10.00 |
| ,, | ராணி பெண் பாடசாலை | ... ,, | 10.45 |
| ,, | ராமச்சந்திரபுரம் | ... மாலை | 7.00 |
| ,, | ராயவரம் | ... ,, | 7.30 |
| 16-11-44 | விராலிமலை | ... ,, | 7.00 |
| ,, | பொருவாய் | ... ,, | 7.30 |
| 17-11-44 | வாளரமாணிக்கம் | ... ,, | 7.00 |
| ,, | ஏம்பல் | ... ,, | 7.30 |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | |
|---|---|
| 4—11—44 | வெட்டம்விடுதி. |
| 5—11—44 | ஏம்பல். |
| 7—11—44 | பேராம்பூர். |
| 9—11—44 | ஆலங்குடி. |
| 10—11—44 | புதுக்கோட்டை. |
| 11—11—44 | பொன்னமராவதி. |
| 12—11—44 | தீத்தான்விடுதி. |
| 14—11—44 | வடகாடு. |
| 16—11—44 | குழிபிறை. |
| 17—11—44 | புதுக்கோட்டை. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,750—9-11-44.